ISSN 2792-1026

31 ஆவது

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

Scan QR Code

Sky Tamil Media Network (Pvt) Ltd


+94757000791 www.skytamilmedia.com skytamil.lk@gmail.com

மாதந்தோறும் இதழ் - 31 13 செப்டம்பர் 2023 @skytamil.lk

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd



கிண்ணியா சபீனா எழுதிய
வண்ணக் கனவுகள்
நூல் அறிமுகம்.



தென் கிழக்கில் அமைந்துள்ள
இயற்கையின் பொக்கிஷங்களில்
ஒன்றான கல் ஓயா
தேசிய பூங்கா



நடிகராகும் கனவுகளுடன்
ஊடகத்துறையில் தடம் பதித்த
ஆர்.ஜே.அழகேந்திரன்



கத்தாரின் பிரபல
புகைப்பட போட்டியில்
இடம்பிடித்த இலங்கை இளைஞர்!
ஹீபைப் முஸம்மில்









## சிரேஷ்ட அறிவிப்பாளரும் எழுத்தாளருமான
# நாகபூஷணி கருப்பையா
## அவர்களுடனான நேர்காணல்

நேர்காணல்: மஜினா உமறு லெவ்வை - மாவடிப்பள்ளி





நடிகராகும் கனவுகளுடன் ஊடகத்துறையில் தடம் பதித்த ஆர்.ஜே.அழகேந்ரன்

05 பக்கம்

10 பக்கம்

தென் கிழக்கில் அமைந்துள்ள இயற்கையின் பொக்கிஷங்களில் ஒன்றான கல் ஓயா தேசிய பூங்கா






கத்தாரின் பிரபல புகைப்பட போட்டியில் இடம்பிடித்த இலங்கை இளைஞர்! ஹுஸைப் முஸம்மில்

13 பக்கம்

17 பக்கம்

கிண்ணியா சபீனா எழுதிய வண்ணக் கனவுகள் நூல் அறிமுகம்.





சிரேஷ்ட அறிவிப்பாளரும் எழுத்தாளருமான நாகபூஷணி கருப்பையா அவர்களுடனான நேர்காணல்

24 பக்கம்

sky தமிழ் Media Network
Reg No: PV 00249082

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවට්) ලිමිටෙට්

Scan QR Code



**பணிப்பாளர்:**
ஜே.எம். பாஸித்

**முகாமையாளர்:**
அஸ்வர் ரிஸ்வி

**பிரதம ஆசிரியர்:**
ஷிஹானா நௌபர் - பலாங்கொடை

**இணையாசிரியர்:**
முனீரா வாஹித் - பதுளை
முஹம்மட் ஹாசில் - அநுராதபுரம்

**நிர்வாக குழு:**
ஆர்.எம்.சப்ராஸ் - புத்தளம்
தாரிக் முஹம்மத் - சம்மாந்துறை
குலசிங்கம் கிலசன் - கல்முனை
ஜவ்சன் அஹமட் - மருதமுனை
ஸகியா பாறுக் - சம்மாந்துறை
றொஸான் முஹம்மட் - சாய்ந்தமருது

**ஆசிரியர் குழு :**
எம்.பஹ்த் ஜுனைட் - காத்தான்குடி
கமறுன் நிஸாம் (ஷாமென்) - கண்டி
எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா – கொழும்பு
மஜினா உமறு லெவ்வை – மாவடிப்பள்ளி
சி. கற்பஹாசினி - பலாங்கொடை
பெனாஷில் ஷிப்னா – ஏறாவூர்
நிஹாசா நிசார் - கத்தார்
ஷீபா இப்றாஹீம் - மருதமுனை
றிஹானா இஷாக் - கம்பளை
பயாஸா பாஸில் - கம்பஹா
ஜஸ்றா ஜலீல் - மலேசியா
பாத்திமா சம்சுடீன் - சாய்ந்தமருது
அவ்ஷபா நாகூர்- ஏறாவூர்
பாத்திமா ஹகீமா அமீனுதீன் - ஒட்டமாவடி

**ஆலோசகர்கள் :**
கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்
கவிஞர் நஜ்முல் ஹுசைன்
ரஷீத் எம்.பியாஸ் (நளீமி)
வசீமுல் அக்றம் - சட்டத்தரணி
பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்
றினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்
ஜெஸீம் ஏ. ஹமீட் - ஐக்கிய இராஜ்ஜியம்


இறைவனின் அருளாளும், துணிந்தெழு வாசகர்களின் ஆதரவுடனும், சஞ்சிகை ஆசிரியர் குழுவினரின் விடா முயற்சியுடனும், புதிய மாறுதல்களுடன் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது எமது துணிந்தெழு சஞ்சிகை. புகழனைத்தும் இறைவனுக்கே

துணிந்தெழு சஞ்சிகை வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் எல்லாம்வல்ல இறைவனுக்கும், வாசகர்களுக்கும், சஞ்சிகை ஆசிரியர் குழாமிற்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனின் கீழ் குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்


+97431060249 | 0757000791
skytamil.lk@gmail.com
www.skytamilmedia.com





**ஜே.எம்.பாஸித்**
பணிப்பாளர்
ஸ்கை தமிழ் மற்றும்
துணிந்தெழு சஞ்சிகை
+94776391188





**ஷிஹானா நௌபர்**
பிரதம ஆசிரியர்
துணிந்தெழு சஞ்சிகை
+94781069510

# ஆசிரியர் பக்கம்

**இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றுபட வேண்டிய தருணம் இது...**

உலகில் ஒவ்வொரு நாடும் அபிவிருத்தி அடைந்து கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது. அவற்றில் பொருளாதார ரீதியிலான முன்னேற்றங்களே முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. அதற்கேற்ப வேலைத்திட்டங்களையும் ஒவ்வொரு நாடும் முன்னெடுத்து வருகின்றது.

அதன் ஊடாகப் பல நாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளன. இன்னும் பல நாடுகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. இந்த முன்னேற்றங்களை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டுக்கு ஏற்ற பொருத்தமான திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. அவ்விதமான திட்டங்கள் அந்தந்த நாடுகளுக்கு பிரதிபலன்களையும் அளித்துள்ளன.

ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொள்ளும் போது பொருளாதார ரீதியில் இலங்கை, ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இருந்தது. தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் மாத்திரமல்லாமல் ஆசிய கண்ட நாடுகள் பலவும் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு கீழ் மட்டத்திலேயே அன்று காணப்பட்டன.

ஆனால் கடந்த 75 வருட காலப்பகுதிக்குள் அந்நாடுகளில் பலவும் இலங்கையை விடவும் பல மடங்கு முன்னேறி விட்டன. இன்னும் பல நாடுகள் பொருளாதார ரீதியில் இந்நாட்டைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றன. பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்குத் தேவையான அனைத்து அடிப்படை வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்நாடு தொடர்ந்தும் பின்னடைவுக்கு உள்ளானதாகவே காணப்படுகின்றது. அதிலும் கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கு இந்நாடு முகம்கொடுத்தது. கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தவறானதும் பலவீனமானதுமான பொருளாதார வேலைத்திட்டங்களின் பிரதிபலனாகும். பொருளாதார நிபுணர்களின் கருத்தும் அதுதான்.

பொருளாதார மேம்பாட்டுக்கு தேவையான அடிப்படை வளங்களைக் கொண்டுள்ள நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்கும் நிலைக்கு உள்ளானதென்றால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார வேலைத்திட்டங்களின் தவறுகளே காரணம் என்பதில் ஐயமில்லை.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் இன, மத பேதங்களுக்கு அப்பால் இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றுபட்டு தான் சுதந்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. இருப்பினும் சுதந்திரத்திற்கு பின்வந்த சில அரசியல்வாதிகள் முன்னெடுத்த தவறான கொள்கைகளால் இனரீதியான பார்வை மேலோங்கியதோடு, இனரீதியிலான பிளவுகள் தோற்றம் பெறவும் வழிவகுத்தன. அதன் விளைவாக சுமார் 3 தசாப்த கால யுத்தத்திற்கும் முகம்கொடுக்கும் நிலைக்கு நாடு உள்ளானது. அதனால் விலைமதிக்க முடியாத மனித உயிர் மற்றும் சொத்திழப்புக்களை சந்தித்ததன் விளைவாகவும் இந்நாடு பொருளாதார பின்னடைவுக்கு உள்ளானது.

சுதந்திரத்திற்கு பின் வந்த சில அரசியல்வாதிகள் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் இலங்கையர் என்ற பார்வையுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தால் இலங்கையும் ஏனைய நாடுகளைப் போன்று பொருளாதார ரீதியில் பெரிதும் முன்னேற்றமடைந்திருக்கும். இது பரவலாக உணரப்பட்டுள்ளது.

இந்நிலையில், இனியும் நாம் நாடென்ற வகையில் பின்னடைந்திருக்க முடியாது. ஏனைய நாடுகளைப் போன்று நாமும் முன்னேற்றமடைய வேண்டும் என்ற தேவையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது. 2022 இல் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி இதற்கு பெரிதும் உதவியுள்ளது. உண்மையில் இன, மத பேதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றுபட்டு செயற்படும் போது இந்நாட்டை கட்டியெழுப்புவது அவ்வளவு சிரமமான காரியமல்ல.

# இளம் ஆளுமை அறிமுகம்



குலசிங்கம் கிலசன் –
துணிந்தெழு சஞ்சிகை
ஆசிரியர் குழு உறுப்பினர்

# நடிகராகும் கனவுகளுடன் ஊடகத்துறையில் தடம் பதித்த ஆர்.ஜே.அழகேந்ரன்



இணைய வானொலி, உள்ளூர் வானொலி எனபடிப்படியாக தன் இலட்சிய பயணத்தின் வெற்றிப்படிகளை கடந்து வலம் வரும் இளம் கலைஞர் ஆர். ஜே. அழகேந்ரன் இலங்கையின் பசுமை நிறைந்த மலையக மண்ணின் நாவலப்பிட்டி நகரின் கடியனலேன எனும் ஊரில் பிறந்து தற்போது கெப்பிடல் வானொலியின் அறிவிப்பாளராக பயணித்துக்கொண்டிருபவர்.

ராஜேந்திரன் நிமலா தம்பதிகளின், இரண்டாவது மகனான இவருக்கு ஒரு அக்கா ஒரு தம்பி என்று அழகான அன்பை பகிரும் குடும்பம் வரமாக கிடைத்தது. இவர் தனது ஆரம்பக் கல்வியை, நாவலப்பிட்டி கடியனலேன தமிழ் மகா வித்யாலயத்திலும், உயர்தரத்தை நாவலப்பிட்டி கதிரேசன் மத்திய கல்லூரியிலும் கற்றார்.

சிறு வயதில் இருந்தே சினிமா ஆர்வம் அதிகம் என்பதால் சினிமா சம்பந்தமான தகவல்களை கேட்பது, பத்திரிகைகளில் சினிமா தகவல்களையே முதலாவதாக தேடி பார்ப்பது மற்றும் அதிகமாக வானொலி நிகழ்ச்சிகளை கேட்பது தொலைக்காட்சி பார்ப்பது இவரது பொழுது போக்காக மாறிப்போனது.

எல்லோரைப் போன்றும் குறிப்பிட்ட வயது வரை இவரது இலட்சியம் வைத்தியர் அல்லது பொறியாளர் என மாறி மாறி சொல்லி வந்தார். ஒரு கட்டத்தில் பேசுவது பிடித்துப் போனது இதனால் வானொலியில் தன் குரல் ஒலிக்க வேண்டும் என்று முயற்சியை தொடர்ந்தார்.

பல முயற்சிகளுக்கு பின்னர் வானொலியின் காற்றலைகள் இவரை வரவேற்றது. அதன் படி அழகேந்ரனின் கனவை நனவாக்கியது ஆதவன் வானொலி. 2017 தொடக்கம் 2019 வரை இந்த பயணம் தொடர்ந்தது. 2019 இல் உள்ளூர்

வானொலியான கெப்பிடல் வானொலி இவரை உள்வாங்கி கொண்டது. அந்த பாதை இன்று வரை முடிவின்றி தொடர்கிறது.

கிட்டத்தட்ட 10 வயது வரை சில தமிழ் வார்த்தைகள் இவருக்கு பேசமுடியாமல் இருந்தது அதனால் பெரிதாக யாருடனும் பேச பிடிக்காத ஒரு அமைதியான மாணவனாக இருந்தவர் தரம் 9 படிக்கும்போது சுதந்திர தினத்துக்கு மேடையில் பேசும் போது விட்ட சிறுதவறுக்கு பாடசாலையே கைகொட்டி சிரிக்க இவருக்குள் ஒரு வைராக்கியம் பிறந்தது "நான் பேசுறத எல்லாரும் கேக்கனும்" என்று, அதுவே இவரை வானொலி வரை பேசவைத்த அடித்தளம். உயர் தரம் படிக்கும் போது ஆசிரியர் தின நிகழ்வை தொகுத்து வழங்கிய பின் அப்போதைய அதிபர் திரு. ராஜேந்திரன் தோளில் தட்டி வாழ்த்திய தருணம் மேலும் பேச்சாற்றலை வளர்க்க ஊக்கமளித்தது. நண்பர்களும் அன்றிலிருந்தே RJ அழகேட்ஸ் என அழைத்தனர்.

ஆதவன் வானொலியில் உள்ளம் கேட்குமே, பம்பரம், நினைத்தாலே இனிக்கும் என பல நிகழ்ச்சிகளை தயாரித்து தொகுத்து வழங்கினார். தற்போது கெப்பிடல் பண்பலையில் விடியும் வரை நிகழ்ச்சியில் ஆரம்பித்து கதை பேசும் காதல், காதலுடன், சட்டப்படி 20 என பல நிகழ்ச்சிகளை





தொகுத்து வழங்கிய போதிலும் கதை பேசும் காதல் மற்றும் காதலுடன் நிகழ்ச்சிகள் இவருக்கு மிக நெருக்கமானவை.

பேசுவது போலவே கவிதைகள் எழுதவும் பிடித்த இவருக்கு இயல்பாகவே நடனமாடவும் நடிக்கவும் பாடவும் கூட இறைவன் பல திறமைகளை கொடுத்திருப்பது சிறப்பு. "தொலைவினிலே.." எனும் ஒரு பாடலையும் எழுதியுள்ளார். இத்தனை அனுபவங்களையும் இவர் எளிதில் பெற்றுவிடவில்லை பல கஷ்டங்களையும் வலிகளையும் எதிர்கொண்டு சாதிக்க வேண்டும் என்று இன்று வரை தன்னம்பிக்கையோடும் துடிப்போடும் செயற்படுகிறார்.

எப்போதும் எல்லோருக்கும் தெரிந்த ஒரு நபராக இருக்க வேண்டும் என்பதே இவரது ஆசை.

வானொலியில் குரலால் இடம் பிடித்தவர் தற்போது வாரநாட்களில் இரவு 9 மணி முதல் 10 மணி வரை கெப்பிடல் தொலைக்காட்சியில் இசையில் ஒரு ரொமான்ஸ் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கி வருகிறார்.

இந்தியாவின் விஜய் தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியாவது தொகுத்து வழங்க வேண்டும் என்ற கனவும் சினிமா இல்லாவிட்டாலும் சின்னத்திரையிலாவது தான் கால் பதிக்க வேண்டும் என்ற முயற்சியும் இன்று வரை இவரது தேடலை அதிகரித்து கொண்டே இருக்கிறது.

பிக்பாஸ் கூட இவரது ஒரு இலக்கு எனலாம் ஆர். ஜே. அழகேந்ரனின் முயற்சிகள் பலித்து சின்னத்திரை கடந்து வெள்ளித்திரையிலும் கால் பதிக்க ஸ்கை தமிழ் ஊடகமும் துணிந்தெழு சஞ்சிகையும் வாழ்த்துகின்றது.

# கண்கள் மூடாத நினைவுகள்

பௌஸியா இக்பால்
(ஆசிரியை) வரகாமுறை

காலம் ஒரு வருடம் கடந்தது
கண்கள் மூடாத நினைவுகள் படர்ந்தது
மண்ணுக்குள் மட்டுமல்ல
கண்ணுக்குளும் வாழும் உங்களை
நினைவுகள் தொடர்ந்தது

பிரிவும் இழப்பும் உருகித் தவிக்குது
நெஞ்சம்
இனி இந்த பிரபஞ்சத்தில் என்ன தான்
மிச்சம் அமைதிக்கு பஞ்சம்

உமது திறமை உமது பொறுமை
வரலாறு சொல்லும் உண்மை
கவலைகள் கட்டுக்கட்டா சேருகின்ற
போது தேடுகின்றேன் உம் முகம்
வாருங்கள் கனவில் கொஞ்சம்

சமமாய் சகஜமாய் தோழனாய் தோள்
கொடுத்து வாழ்ந்தீர் மக்கள் மத்தியில்
மறக்கவில்லை மரிக்கவில்லை நீங்கள்
சொல்லிக் கொடுத்த அறிவுரைகள்
இன்னும் அவர்கள் புத்தியில்

நீங்கள் இல்லாத உலகில்
என்ன தான் என்னிடம் மிகுதி
அழுதழுது கண்களுக்கும் ஜீவனில்லை,
இருந்தும் வாழ்கின்றேன்
நம் பிள்ளைகளே உங்கள் இரத்ததின்
ஒரு பகுதி

வாழ்ந்த காலத்தின் ஒவ்வொரு
துளிகளையும் மணிமணியாய்
கோர்த்துள்ளேன்-இனி
அந்த ஞாபகங்களை கண்களுக்குள்
புதைத்து கனவு கான சேர்த்துள்ளேன்

இரணம் முடிந்தால் மரணம்
இது இறைவன் சொல்லிய கணக்கு
இருந்தும் அழுகின்றேன்
பிரிவை தாங்க முடியாது எனக்கு
கவலையில் மீள உங்கள் பெயரில் தர்மம்
நாலு பேருக்கு நல்லது செய்ய
என் பயணங்கள் தொடரும்



சிறுகதை

# அனுபவ வாயில்
## (தொடர் 03)

முஷ்பிகா முன்சிர்
திஹாரிய -ஹாதியா கல்வி நிறுவனம்

பல ஊர்மண் வாசனைகளுடன் பளிச்சிட்டது புது அறிமுகங்கள். இரண்டே வார்த்தைகள் மட்டும் தான் அறிமுகத்தின் ஆரம்பம் "உங்க பெயர் என்ன? எங்கிருந்து வந்தீங்க" இப்படித்தான் ஆரம்பமாகியது அறிமுக ஆரம்ப அனுபவம். கேட்ட அடுத்த நிமிடம் மறக்கும் பெயர்களும் மீண்டும் பெயர் கேட்க தயக்கத்துடன் முதல் பாடமாய் மனனம் செய்த பெயர்கள் ஒரு இனிமையான தொடக்க நட்பின் ஆரம்பம் தான் அது. இரண்டே வார்த்தையுடன் தொடங்கிய அறிமுகத்தின் பின் முற்றுப்புள்ளி இல்லாத கதைகள் ஆரம்பிக்கப்படும். அதில் மேற்கோட்குறிக்குள் நுழையும் சம்பவங்களும் சம்பாஷனைகளும் ஏராளம். இவ்வாறு உமைராவின் அனுபவக்கதையில் ஆமினாவின் நட்பு தொடக்கப் புள்ளியில் இருந்து.

பின் தங்கிய ஓர் கிராமத்தில் சிறகடித்து பறக்க கற்றுக் கொள்ளவே கல்வித் தாகத்தை தீர்ப்பதற்கு மண் விட்டு மண் வந்த அவளின் கதைதான் முற்றுப்புள்ளி இல்லாத சரிதையில் ஒன்று. தந்தை முகம் கண்டிராத அந்த குருவிக்கு ஒரு சிறகாய் தாய்மட்டுமே, அத்தோடு ஒரு சகோதரியுமே அவள் வாழ்வின் சொத்துகளாய் இருந்தது."சில நம்பிக்கையின் அடையாளங்களில் இருப்பது போல் இருக்கிறது உன்னுடன் தோழமை நம்முள் நிலைக்க ஆவல் கொள்கிறேன். என இருவரின் உரையாடல்கள் தொடர்ந்தது" "யாழ்ப்பாணத்தில் எல் டி டி பிரச்சனையில் என்னோட உம்மாவினதும் வாப்பாவினதும் முழு குடும்பமும் அவர்களை விட்டு பிரிந்து விட்டனர். நான் கூட பிறந்திருக்கவில்லை அகதிகளாக உம்மாவும் வாப்பாவும் ஒரெடுத்துல வந்து நின்டாங்களாம் மாதங்கள் உருண்டோடி கிடைத்த வேலைகளை செய்து கொண்டு ஜீவனோபாயம் ஓரளவு நல்ல நிலைக்கு வந்தாம். என்னை பெற்றெடுப்பதற்காக

என் உம்மா கர்ப்பிணியாக இருந்தாங்களாம். அக்கப்பக்க சொந்தங்களுடன் வாப்பா மட்டும் தான் உம்மாவுக்கு துணையாக இருந்தாராம். என்னை தேவதையாய் நினைத்து என் முகம் காணும் நாளுக்கு எதிர்பார்த்த நாட்கள் நெருங்கிய போது என் உம்மா வைத்தியசாலையில் நிருத்தப்பட்டாவாம். என் முகமோ உலகுக்கு எட்டியதும் அந்த ஆனந்தத்தில் என் வாப்பா என்னை பார்ப்பதற்கென்று விரைந்து வந்த நிமிடம் தான் அவரின் கடைசி மூச்சு விடும் சந்தர்ப்பமாய் இருந்தது ஒரு சொந்தமும்மில்லாமல் இருந்த என் உம்மாவுக்கு இறைவனின் சோதனை கடுமையான காலமது ஒரு சொந்தத்தை எடுத்து அதிலிருந்து வந்த சொத்தான என்னை வளர்க்க வேண்டும். இறை நம்பிக்கையுடன் பொறுமையுடன் என்னை வளர்க்க ஆரம்பித்து விட்டார். காலம் சென்றது. இடி விழுந்த வாழ்க்கையில் மழையாய் நற்செய்தி வந்தது.

எனது உம்மாவின் சகோதரி அதாவது எனது சாச்சி உயிருடன் இருப்பதாய் செய்தி வந்தது. ஆனால் எனது உம்மாவோ ஆனந்தத்தில் இருந்தாலும் தேடும் முயற்ச்சியை செய்ய முடியாத நிர்பந்த நிலையில் இருந்தார்களாம். திடீரென ஒரு நாள் குழந்தைகளுடன் சாச்சா பல போராட்டங்களுக்கு மத்தியில் வீடு தேடி வந்தார். ஒரு பெரிய சம்பவம் என் சாச்சி கைதியாக்கப்பட்ட நிலையில் தவித்தாள் குழந்தையையும் கணவரையும் அவளை விட்டு செல்லுமாறு கூறியதில் வேறு வழி இன்று இந்த வாரிசு வாழ வேண்டும் என என் தங்கச்சி என் உம்மாவிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

சாச்சியை "உயிர்பணயம் வைத்தாவது மீட்டி வருவேன் " என்ற உறுதியுடன் சென்ற சாச்சா திரும்பி வரவில்லை. ஒரு வித்தியாசம் பாராது உம்மா பல இடர்களுடன் வளர்த்து ஆளாக்கினார். தெளிவுள்ள வயதென்பதால் அவளுக்கு தெரியாத இரகசியமாய் உம்மா என்னிடம் கூறியிருக்கிறார். அவள் வளர்ப்பில் பொறுப்பு என்னிடமும் உள்ளது என்று வாக்கு அளித்து விட்டேன் நானும் "சமூகத்தில் சிறந்த ஆளுமை பெண்ணாய் மிளிர வேண்டும் என்ற அவாவுடனே எத்தனை இடர்களையும் பொறுத்து பொறுமை காக்கிறேன். இறைவன் துணை எப்பொழுதும் உண்டு. இதுவே என் தாயின் அமுதமொழி." என்று மன தைரியத்துடன் கூறினாள் அவள் சரிதையை. இறைவன் படைத்த வாழ்வோ விசித்திரமானது அதில் ஒருவரின் வாழ்க்கை புத்தகம் இப்படி இருப்பது போல், ஒவ்வொருவரையும் வாழ்க்கை வித்தியாசமானது தான்.

அறிமுகம் என்ற பெயரில் ஒரு சில வார்த்தைகளில் அவர்கள் கூறினாலும் ஆழமான பல கதைகளை ஒவ்வொருவரிலும் காணப்பட்டன.

நிலம் விட்டு நிலம் தாண்டி ஒரு இலக்கு நோக்கி பயணத்தில் சந்திக்கும் பயணிகளிடமிருந்து பல அனுபவங்கள் கற்றுக் கொண்டாள் ஆமினா. அனுதாபம், செல்வம், திறமை, வெளிப்படையான தோற்றம், இவைகளில் பெறும்பாலும் நட்புகள் உருவாகப்பட்டிருக்கிறது.

உண்மையான பாசத்திலும் இறைவனுக்காக மட்டும் உறவு கொள்ளும் நட்புக்குள் ஆயிரத்தில் ஒன்று அல்லது இரண்டு என மட்டுமே இருக்கும் இதனாலேயே நட்பு சிறப்பாயின் சுவனத்தில் ஒளியிலான மேடையில் ஒன்று சேர்க்கப்படுவீர். என நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் கூற்று ஆமினாவின் சிந்தனையில் தவழ்ந்து கொண்டிருந்தது.

தொடரும்...

# துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்

மாதந்தோறும் | இதழ் - 31 | 13 செப்டம்பர் 2023

@skytamil.lk


TRAVEL GUIDE




எஸ்.ஐ.எம்.நிப்ராஸ்.
ஓட்டமாவடி






# தென் கிழக்கில் அமைந்துள்ள இயற்கையின் பொக்கிஷங்களில் ஒன்றான கல் ஓயா தேசிய பூங்கா

இலங்கையின் தென் கிழக்கில் அம்பாறைக்கு மேற்கே அமைந்துள்ள கல் ஓயா தேசிய பூங்கா இயற்கையாக உருவான எண்ணற்ற நூற்றாண்டுகளாக மனிதனின் கைகளால் தீண்டப்படாமல் உள்ள இயற்கை பொக்கிஷங்களில் ஒன்றாகும். 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, அன்று முதல் 1965 வரை கல்லோயா அபிவிருத்தி சபையால் இவ்வனம் நிறுவகிக்கப்பட்டது. பின்பு வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.

கல்லோயா தேசிய பூங்கா இலங்கையின் தலைநகர் கொழும்பிலிருந்து 314 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. சேனாநாயக்க சமுத்திர நீர்த்தேக்கத்தின் நீர்ப்பிடிப்புப் பகுதியைப் பாதுகாப்பதற்காக கல் ஓயா தேசியப் பூங்கா ஆரம்பிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இலங்கையின் அழகிய இயற்கைக் காட்சிகளில் ஒன்றாகக் கருதப்படுகின்ற இப்பகுதி படகு மூலம் சபாரி செய்யக்கூடிய இலங்கையின் ஒரே ஒரு தேசிய பூங்காவாக காணப்படுகின்றது. தினந்தோறும் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை சுற்றுலா பயணிகள் பார்வையிடுவதற்காக திறக்கப்பட்டிருக்கும்.

கல் ஓயா தேசிய பூங்காவிற்கான நுழைவு கட்டணமாக உள்நாட்டு சுற்றுலா பயணி ஒருவருக்கு 60 ரூபாயும் வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவருக்கு 12 டாலர்களும் அறவிடப்படுகின்றது. 25,900 ஹெக்டேர்களுக்கு மேல் பசுமையான காடுகளும் மற்றும் திறந்த சவனங்கள் சேனாநாயக்க சமுத்திர ஏரியுடன் இணைந்து செழித்து காணப்படுகின்றன.

கல் ஓயா தேசிய பூங்காவில் சுமார் 45% காடுகளாகவும், 33% சவன்னாவாகவும், 9% புல்வெளிகளாகவும், 2% சேனாவாகவும்

காணப்படுகின்றது. இப் பூங்கா சுமார் 10% நீர்நிலைகளைக் கொண்டுள்ளது. காடுகள் நிறைந்த பகுதிகள் பொதுவாக பசுமையானவை மற்றும் அடர்த்தியான மூடிய விதான அடுக்குடன் நடுத்தர உயரம் கொண்டவை. பெரும்பாலும் பூங்காவின் மேற்கே காணப்படும் சவன்னாவில் அழகான மர இனங்கள் உள்ளன, மேலும் நிலத்தடி தாவரங்கள் உயரமான புற்களைக் கொண்டுள்ளது. புல்வெளி மண்டலம் பெரும்பாலும் நீர்நிலைகளைச் சுற்றி காணப்படுகின்றது.

நமது கிரகம் பார்ப்பதற்கு ஒரு அதிசயம். இருப்பினும், உண்மையான இயற்கையை அனுபவிக்க பூமியில் குறைவான இடங்கள் உள்ளன. பிரபஞ்சத்தின் அதிசயங்களை உலகிலேயே இரசிக்க பல இடங்கள் உண்டு கல் ஓயா தேசிய பூங்கா அந்த இடங்களில் ஒன்றாகும். இலங்கையின் மிகப்பெரிய உள்நாட்டு நீர்நிலைகளில் ஒன்றான சேனாநாயக்க சமுத்திரத்துடனான நீரின் மேற்பரப்பு தீவுகளால் நிரம்பியுள்ளது.

கட்டிடங்கள் இல்லை, போக்குவரத்து நெரிசல் இல்லை, இது ஒரு அமைதியான இடம், அதைச் சுற்றியுள்ள அனைத்தும் சுற்றுலா பயணிகளுக்கு மன அமைதியையும் ஆறுதலையும் அளிக்கின்றது. கல்லோயா தேசிய வனத்தில் முக்கிய விடயமாக அதிகமான யானைக் கூட்டத்தைக் குறிப்பிடலாம். மூன்று முக்கிய ஆயுர்வேத மருத்துவ மூலிகைகளான கடுக்காய்,தான்றி, நெல்லி என்பவற்றுடன் ஏனைய தாவரங்களும் இங்கு ஓங்கி உயர்ந்து காணப்படுகின்றன.

மேலும் இப்பகுதியில் காணப்படும் சேனாநாயக்க சமுத்திரத்தில் யானைகள் நீந்தி சமுத்திரத்தை கடக்கும் அரிய காட்சிகளை கூட இங்கு வரும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்க முடியும். இது லாங்கூர், டோக் மக்காக், சிறுத்தை, சோம்பல் கரடி, காட்டுப்பன்றி, நீர் எருமை மற்றும் மான் உள்ளிட்ட 32 வகையான பாலூட்டிகளின் தாயகமாகும். மேலும், ஏறக்குறைய 150 வெவ்வேறு வகையான பறவைகள் வானத்தை அலங்கரிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, அது மாத்திரமின்றி பறவைகள் சமுத்திரத்தில் நீர் அருந்தும் காட்சிகளும் மீன்களை வேட்டையாடும் அரிய காட்சிகளையும் சில சந்தர்ப்பங்களில் அவதானிக்க முடியும். சேனாநாயக்க சமுத்திரா ஏரியின் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள படகு சவாரி நீங்கள் ஈடுபடும் போது அமைதியான நீரின் மீது நீங்கள் பயணிக்கும் போது, கல் ஓயா தேசிய பூங்கா உயிர்களால் நிறைந்திருப்பதை அவதானிப்பீர்கள்.

கல் ஓயாவில் உள்ள பறவைகளில் ஐபிஸ், கார்மோரண்ட், ஈக்ரெட்ஸ், கழுகுகள் மற்றும் பல உள்ளன. வேதா பழங்குடியினரும் கல் ஓயாவில் வசிக்கின்றனர் அவர்களுடன் தொடர்பு கொள்ளவும், அவர்களின் வாழ்க்கை முறை மற்றும் பூங்கா பற்றிய நுண்ணறிவுகளைப் பெறவும் உங்களுக்கு வாய்ப்பு வழங்கப்படலாம். வனாந்தரத்தில் ஒரு இரவு கழிக்க விரும்புபவர்களுக்கு பூங்காவில் சில விசேட முகாம்கள் வழங்கும் ஏற்பாடுகளும் உள்ளன.

குறிப்பாக நீங்கள் இந்த சுற்றுலாவை மேற்கொள்ள விரும்பினால் அங்குள்ள சுற்றுலா வழிகாட்டியின் உதவியுடனே மேற்படி பூங்காவை முற்று முழுதாக சுற்றி பார்க்க வேண்டும். அவர்களுக்கு அது தொடர்பான பரிபூரணமான அறிவும் ஆபத்துகளில் இருந்து சுற்றுலா பயணிகளை பாதுகாக்கும் வழிமுறையும்





அனுபவமும் காணப்படும். மேலும் இங்கு காணப்படும் அறிவுறுத்தல்களையும் சுற்றுலா பயணிகள் முறையாக பின்பற்றுதலும் மிகவும் அவசியமாகவும் காணப்படுகின்றது.

ஆகவே நீங்களும் ஒரு தடவையாவது கல்லோயா தேசிய பூங்காவை பார்வையிட சந்தர்ப்பம் அமைந்தால் நிச்சயமாக உங்களுடைய சுற்றுலா பயணத்தை திட்டமிட்டு உங்கள் பயணத்தை சிறப்பாகவும் சந்தோஷமிக்கதாகவும் மாற்றிக் கொள்ளுங்கள். மேலும் தங்களது பயணம் இலகுவாக அமைத்துக் கொள்ள தேசிய பூங்காவின் +94632242002 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி தங்கள் பயணங்களை இலகுபடுத்திக் கொள்ளுங்கள்.











# கத்தாரின் பிரபல புகைப்பட போட்டியில்
# இடம்பிடித்த இலங்கை இளைஞர்!

ஜே.எம்.பாஸித்
கத்தார்

கத்தார் சபாரி மால் நடாத்திய மாபெரும் புகைப்பட போட்டியான "FRAMES SEASON 6" இல் 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற கத்தார் பீபா உலகக்கோப்பை கால்பந்து போட்டியின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் எனும் தலைப்பின் கீழ் போட்டி நடத்தப்பட்டது. இதில் இலங்கையில் கண்டி மாவட்டம் வடதெனிய பிரதேசத்தை சேர்ந்த இளைஞர் ஹுசைப் முஸம்மிலின் புகைப்படம் தெரிவு செய்யப்படுள்ளது.

இவர் தன் சிறு வயதிலிருந்தே புகைப்பட துறையில் அதிக ஆர்வம் கொண்டவர். இவர் பல போட்டிகளிலும் பங்கு பற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இவைகள் மாத்திரமின்றி ஒட்டு மொத்த இந்திய திரை உலக பிரபலங்களும் இணைந்த மிக பிரம்மாண்டமான நிகழ்வான தமிழ் மகன் விருதில் புகைப்பட கலைஞராக பணியாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் எமது ஸ்கை தமிழ் ஊடகத்தின் ஊடகவியலாளராகவும், புகைப்படப் பிடிப்பாளராக, பணியாறியுள்ளார். தற்போது இவர் கத்தாரில் வடிவமைப்பாளராக தொழில் புரிந்து கொண்டு அவருடைய திறமையை புகைப்படங்கள் மூலம் வெளிக்காட்டி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பிரபல புகைப்பட போட்டியில் சுமார் 500றக்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டனர். அதில் பிரதானமாக சுமார் முப்பது புகைப்படங்கள் தெரிவு செய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட புகைப்படங்கள் கத்தார் அபு ஹமூரில் உள்ள சபாரி மாலில் ஆகஸ்ட் 19 தொடக்கம் ஆகஸ்ட் 30 வரை மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இக் கண்காட்சியில் காட்சிபடுத்தப்பட்டுள்ள புகைப்படங்களுக்கு நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு பணப்பரிசு வழங்கப்படும்.





# ஓயாத வறுமையும் ஓரம் கட்டும் மனிதர்களும்



பாதிமா சபா
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
ஊடக கற்கைகள் துறை

வாழ்க்கையெனும் அழகான பயணத்தில் அனுதினமும் விரும்பியோ விரும்பாமலோ பல பயணங்களை நம் மேற்கொள்கிறோம். ஆம் அப்படித்தான் நானும் எங்காவது தேவைகளுக்காக பயணங்களை மேற்கொள்ளும் போது என்றுமே என் கண்களில் பதிவது அந்த பாதையோரம் நின்றும் அமர்ந்தும் யாசகம் கேட்போரின் அவலநிலை தான். இவர்களின் வலி சுமந்த வாழ்க்கையை வாசகர்களின் மத்தியில் பேசி அவர்களின் உணர்களையும் மதிக்கத்தக்கதாய் மாற்ற வேண்டும் என்பது என் நெடு நாள் ஆசை அதற்கான வாய்ப்பாக இக் கட்டுரை அமையப் போகிறது.

இறைவனின் படைப்பில் அனைவரும் மனிதர்களே என்று மனிதம் பேசும் பலர் தான் மற்றவர்களின் உணர்வுகளை மதிக்கத் தெரியாமல் இன்றும் பாதையோரம் நின்று யாசகம் கேட்போரை அவமதித்து செல்கின்றனர். வார்த்தையில் பேசும் மனிதத்தை நடைமுறையில் பலரும் பேணுவது இல்லை என்பதே உண்மை.

கைகளை இழந்து, கால்களை இழந்து சில நேரம் பார்வையையே இழந்து அரைவயிற்று பட்டினியாய், ஒரு நேர உணவுக்காய் தவிக்கும் அந்த பாதையோர வாழ்க்கையானது கொடுமையான அனுபவங்களையும் வலி நிறைந்த வேதனையையும் கொண்டது. பெற்றோரை இழந்து, பெற்ற பிள்ளைகளால் கைவிடப்பட்டு, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு, குடும்ப பின்னணியையே இழந்து சில நேரங்களில் பிறவியிலேயே அங்கவீனமாய் பிறந்து நடைபாதையையே படுத்து உறங்கும் வீடாய்க் கொண்டு வாழும் அவர்களின் வாழ்க்கை வேண்டும் என்றே அவர்கள் விரும்பி ஏற்றுக் கொண்டது கிடையாது. விதியின் விளையாட்டால் பெற்றுக்கொண்ட வாழ்க்கை அது. வறுமையின் கைப்பிடியில் ஏங்கித் தவிக்கும் அந்த வாழ்க்கை எண்ணில் அடங்காத



ஏக்கங்களை தன்னுள்ளே கொண்டுள்ளது. ஆசை என்ற உணர்வுக்கு இடம் இல்லாமல் பிறர் கொடுப்பவனவற்றை கையில் இறுக்கப்பற்றி அத்தோடே தன் ஆசைகளை முடித்துக் கொண்டு பயணிக்கின்றனர் அந்த பாதையோர மனிதர்கள்.

பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொன்றுக்கும் நிகழ்வெடுத்து கையில் இருக்கும் அத்தனை தொகையையும் கொட்டி தீர்த்து எதிலுமே திருப்தி இல்லாமல் மீண்டும் மீண்டும் வீண் ஆசையால் இறைவன் கொடுத்த அழகிய வாழ்க்கையை குறை சொல்லித் திரியும் நம் மத்தியில் ஒரு நேர உணவாவது கிடைத்தால் போதும் என்று நினைக்கும் அர்களின் உள்ளத்தை உணரக்கூட இங்கு யாருமில்லை.

நம்மிடம் கையேந்தும் அவர்களை காக்க வைத்து முகம் சுளித்து அவமதித்து மீண்டும் அவர்களுக்கு ரணங்களை கொடுக்கும் முன் சற்றாவது சிந்தித்து பார்த்தோமேயானால் அவர்களின் உணர்வுகளும் காக்கப்படும் அல்லவா. பிரச்சனை என்னவென்றால் இக்கால மனிதன் சற்றேனும் நின்று சிந்திக்க கூட நேரம் இல்லை என்று சாக்குபோக்காக சொல்லிக் கொண்டு பயணித்துக் கொண்டே இருக்கின்றான். ஒன்றை மட்டும் நாங்கள் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும் நம் பயணங்கள் எல்லாம் தினம் தொடரக்கூடியது அல்ல,என்றோ ஒருநாள் முற்றுப்பெற கூடியது. இறைவன் கொடுத்த இந்த வாழ்க்கையை அவனே ஒரு நாள் எங்களிடம் இருந்து எடுத்துக் கொள்வான். நாம் கஷ்டப்பட்டு சம்பாதித்து சேர்க்கும் எல்லா சொத்தும் எங்களை ஒரு நாள் கைவிட்டு விடும். ஆனால் முகம் தெரியாத யாரோ ஒருவருக்கு செய்யும் உதவிதான் எங்களுக்கு கை கொடுக்கும்.

பணம் பணம் என்று அலையும் எல்லா மனித உயிர்களும் ஒருநாள் மதிப்பற்று பிணமாய்த்தான் போகப் போகிறது. அப்படி இருக்க ஏன் இத்தனை வேறுபாடுகள், ஏன் இத்தனை அவமதிப்புக்கள். ஒரே பூமித்தாயின் மடியில் பிறந்த நாங்கள் எல்லோரும் மனிதம் என்ற ஒற்றை வார்த்தைக்குள் உடன்பட்டோமேயானால் இவ்வுலகில் பிரிவினைகள் இருக்கப் போவதில்லை.

எனவேதான் வீதியில் நின்று அதை வீடாய் நினைத்து பயணிக்கும் அவர்கள் உங்களிடம் ஒரு சிறு தொகை கேட்டால் கொடுத்து விட்டுச் செல்லுங்கள் முகம் சுளித்து விட்டு செல்லாதீர்கள். உங்களிடம் இல்லை என்றால் சிறு புன்னகையாவது கொடுத்து விட்டு செல்லுங்கள் அதைக் கண்டாவது அம் மனங்கள் மகிழுட்டும்.

ஓர் போர்வையால் இழுத்து மூடி தன் கற்பை பேணி கலங்கிய கண்ணீரோடு தினம் தினம் பாதையோரம் நின்று நம்மை கடவுளாய் பார்த்து கையேந்தும் அவர்களின் கண்ணீரை, துடைக்காவிட்டாலும் பரவாயில்லை மீண்டும் அவர்களுக்கு கண்ணீரை கொடுத்துச் செல்லும் நிலைக்கு ஆகாதீர்கள்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 31 | 13 செப்டம்பர் 2023



# அஹிம்சையால் அகிலத்தை வெல்லலாம்

நல்லவர்களின் வெற்றிக்கு முதல் படியாம்
யாருக்கும் இடர் இல்ல நல்ல வழியாம்
யாவரும் விரும்பும் ஒரே இசையாம்
அது உலகம் போற்றும் அஹிம்சையாம்

நூல் நிலையத்தின் வாசகம் இதுவாம்
கல்விக் கூடத்தின் வாசனை இதுவாம்
வாழ்வுக்கு உரிய வேடமும் இதுவாம்
அது வெற்றிக்கு அடித்தளமான அஹிம்சையாம்

புயலையும் தென்றலாக்கும் வலிமை
கொண்டதாம் கல்லையும் கரைய வைக்கும்
தன்மை கொண்டதாம் வறுமையிலும் செம்மை
காண வழிவகுக்குமாம் இவ்வுலகையே வெற்றி
கொள்ளும் அஹிம்சையாம்

போராளிக்கு கிடைத்த ஆயுதம் போன்றதாம்
ஏழைக்கு கிடைத்த புதையல் போன்றதாம்
நல்லவனுக்கு கிடைத்த நல்வழி போன்றதாம்
அது அகிலம் காக்கும் அஹிம்சையாம்

காந்தியடிகள் போராடிய வழி இதுவாம்
புத்தர் போற்றிய மொழி இதுவாம்

## அம்னா நளீம்

நபி நாயகம் போதித்த முறை இதுவாம்
உலகை ஆளும் தர்மமே அஹிம்சையாம்

பெண்களின் கண்ணின் மொழி இதுவாம்
அன்னையின் அன்பு மொழி இதுவாம்
புனிதர்களின் இனிய மொழி இதுவாம்
என்றும் தெவிட்டா அறமொழி அஹிம்சையாம்

ஊமையரின் உணர்வுகளை கூறும் ஒன்றாம்
செவிடர்களின் வார்த்தைகளை கேட்கும் ஒன்றாம்
வீரர்கள் குணத்தில் இருக்கும் ஒன்றாம்
மனித வாழ்வில் உயர்வானது அஹிம்சையாம்
ஐங்குறவரும் இன்பம் கொள்ளும் ஒன்றாம்
துயரத்திலும் தோள் கொடுக்கும் ஒன்றாம்
யாருக்கும் இம்சையிலா இனிமையாம்
அது அகிலம் வெல்லும் அஹிம்சையாம்!

# கிண்ணியா சபீனா எழுதிய வண்ணக் கனவுகள் நூல் அறிமுகம்.




**வாசுகி பி வாசுகி.**
தமிழாழி தொலைக் காட்சியின் இலங்கை கிளை துணைச் செயலாளர் - கொழும்பு.

30 ஆவது துணிந்தெழு சஞ்சிகையின் புதிய முயற்சியான நூல்கள் பற்றிய அறிமுகம், மற்றும் நூல் விமர்சனங்கள், மற்றும், ஏனைய ஆக்கங்கள் பிரசுரிக்கப்படும் பகுதியின் ஊடாக துணிந்தெழு சஞ்சிகை பற்றிய கடந்த காலச் சுவடுகளைப் பிரசுரம் செய்திருந்தோம்.

வாசகர்களின் எண்ணற்ற நல்ல அபிப்பிராயங்களோடு எமது சஞ்சிகைக்கும் எமது பகுதிக்கும் நீங்கள் கொடுத்த ஆதரவோடும் இம்முறை இந்தப் பகுதியின் ஊடாக உங்களை நாம் சந்திப்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

ஒரு புத்தகப் பிரசவம் என்பது ஒரு மனிதனின் வாழ்வில் ஒரு தாய் பிள்ளையைப் பெற்றெடுப்பது போன்றதொரு உணர்வைக் கொடுக்கும் என்பதை நாம் யாவரும் அறிந்திருக்கின்றோம்.! அதிலும் ஈழத்து எழுத்தாளர்களது நூல்கள் என்பது தினந்தோறும் பரிச்சயமானதும் வாடிக்கையானதுமாகும். அப்படியான நூல் பிரசவங்களையும் அது சார்ந்த பல்வேறு தகவல்களையும் அதற்கான சுவடுகளையும் துணிந்தெழு சஞ்சிகையானது தேடிப் பிரசுரம் செய்வதில் மட்டில்லா மகிழ்ச்சி கொள்கிறது. ஆங்காங்கே காணாமற் போய்க் கிடக்கும் கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் பல்துறைக் கலைஞர்களையும் தேடி, நாடி அவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகிற்கு அறிமுகம் செய்து வைப்பதும் துணிந்தெழு சஞ்சிகையின் அறப்பணிகளில் ஒன்றாகும்.

அப்படியாக இம்முறை ஒரு புத்தக அறிமுகத்தோடும் அந்தப் புத்தகம் பற்றிய அனுபவப் பகிர்வோடும் உங்களை நாம் சந்திக்கிறோம்.






நூலின் பெயர் :- வண்ணக் கனவுகள்
நூலாசிரியர் :- திருமதி. சித்தி சபீனா வைத்துள்ளாஹ், (கிண்ணியா சபீனா )
உதவி அதிபர், வு/கிண் /அல்ஹிரா மகளிர் மகா வித்தியாலயம், கிண்ணியா.

நூலின் வகை :- கவிதை நூல்
பக்கங்கள் :- 120
வெளியீடு பற்றி :- இந்த நூலை, பிரான்சிலிருந்து தமிழ் நெஞ்சம் அமைப்பானது வெளியீடு செய்தது.

இந்நூல் வெளியீடு கிண்ணியா பொது நூலகக் கேட்போர் கூடத்தில் 2023.01.22 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு முப்பது மணி அளவில் வெகு விமர்சையாக வெளியீடு செய்து வைக்கப்பட்டது. இந்த நூலைப் பற்றி விமர்சனப் பார்வையில் திறனாய்வு செய்திருக்கிறார். யாழ்ப்பாணத்தைப் பிறப்படமாகக் கொண்ட தமிழாழி தொலைக்காட்சியின் இலங்கைக் கிளை துணைச் செயலாளர் வாசுகி பி வாசு அவர்கள்.

கிண்ணியா சபீனா எனும் புனை பெயர் கொண்ட, திருமதி சித்தி சபீனா வைத்துள்ளாஹ் எனும் கவிதாயினி தனது எண்ணக்கருக்களை அள்ளித் தெளித்து வண்ணக்கனவுகள் எனும் கவிதைத் தொகுப்பினை வெளியீடு செய்து வைத்தார். இந்நூலினத் திறனாய்வு செய்வதில் பெருமிதம் அடைகிறேன்.

இந்நூலின் முகப்பு அட்டை எல்லோரையும் கவரக் கூடியதாகவும் உள்ளடக்கத்தை வாசித்து விட வேண்டும் என்ற உணர்வைத் தருவது போலவும் காணப்படுகின்றது! அத்தோடு பிரான்ஸிலிருந்து தமிழ் நெஞ்சம் அமீன் ஐயா அவர்கள் இந்நூலுக்கு அளித்துள்ள நயமிக்க வாழ்த்துரையும் அழகு சேர்க்கின்றது! சொற்கடல் மேலே ஏறி, சுடர்த்தமிழ் படகை ஒட்டி அற்புதஞ் செய்யும் உந்தன் அடிகளுக் கீடும் உண்டோ! என இந்நூலின் கவிச் சிறப்பைப் படம் போட்டுக் காட்டுகின்றார்! அத்தோடு இன்னும் சிலரின் வாழ்த்துரைகளும் நூலை முழுமையாக




வாசித்திடத் தூண்டுகிறது! இந்நூலின் முதற்கவிதை, உருண்டிடும் உலகினில், எண்ணிலா இன்பங்கள் எமக்களித்த இறைவனைப் புகழ்ந்திடல் புண்ணியமே! என, இறையருள் கிடைத்திடுமே எனும் தலைப்பில் இறைபுகழ் பாடுகிறது! அடுத்த கவிதையாக, வளமான தமிழே எனச் செந்தமிழைப் போற்றுகிறது.

தேனிடும் சுவையினில் தித்திக்கும் அமுதே! பாரினில் பண்ணிசை பாடுவோம் செழிக்கவே! எனப் புகழ் பாடுகிறது! மேலும் மனித உரிமைகள் போற்றுவோம் என்று கூறிக் கவிதைக்குள் நுழையும் போது மோதிடும் இனவெறி மூர்க்கரின் கொடுமையை, நீதிமுன் நிறுத்திடும் நெஞ்சுரம் கொள்வோமே! என்றுரைத்து இனவேற்றுமையை வெறுக்கிறது! பசித்தழும் பிஞ்சுகள் படித்திடவும் பாரிலவர், புசித்திட உணவும் புலமையும் கொடுப்போமே! என்று சந்ததியின் வளர்ச்சியில் அக்கறை காட்டுகிறது ! அத்தோடு, பசுமைக் கொலை எனத் தலைப்பிட்டு மரங்களை அழிப்போருக்கு, பசுமைக் கொலையால் பாலைவனம் தோன்றிடுமே! என்று வேதனைப் படுகிறது! மரங்கள் இல்லா உலகம் எப்படி இருக்கும் என இக் கவிதை,படம் பிடித்துக் காட்டுகிறது!

இன்னும் வாழ்வியல் அனுபவங்கள், தன்னம்பிக்கை, நட்பு, காதலில் காத்திருப்பு, தாய்மையின் சிறப்பு, மற்றும் உழைப்பின் மேன்மைகள் எனப் பல்வேறு விடயங்களை அடுக்கியே கவிஞர் தன் கவித்துவத்தின் ஊடாக விளக்குகிறார்! பணம் என்னடா பணம் எனும் தலைப்பில் "உலகத்தில் மனிதன் பணத்துக்காக அலைந்து உழைத்து வாழ்ந்து மறைவதை வித்தியாசமாய் இக் கவிதை கூறுகிறது: கள்ளச்

சந்தையிற் கொள்ளை அடித்து, நல்லவராய் நடித்து அள்ளிக் கட்டியே, அலங்கார வாழ்வுக்கு அடித்தளமிடும் மானிடா! என ஆரம்பித்து அழகு தமிழில் யதார்த்தங்களைத் தொட்டுச் செல்கிறது! அந்த வகையில் இந்நூல் பலராலும் விரும்பி வாசிக்கக் கூடிய ஒரு சிறந்த நூலாகி விடும் என்பதில் சந்தேகம் இல்லை! கிண்ணியாவின் இலக்கிய வரலாற்றிலே தனக்கென ஒரு இடம் பிடித்து வரும் கவிதாயினியின் இந்நூலானது, காலவெள்ளத்தால் அழிந்து விடாது உயிர் வாழும். என்றால் மிகையாகாது! எனைத் தாங்கும் புவித் தாயே எனும் அழகிய தலைப்பில் இயற்கையின் அழகினை நயமாகக் கூறிப் "புவித் தாயைக் காப்பதும் கடமை "எனக் கவிதை மூலம் கூறுகிறார்!!

செந்நெல் குலுங்கிடும் சேற்று வயலும், செந்தேன் சொரிந்திடும் செழுமை மலர்களும், சொந்தம் சொல்லிச் சொக்கிடும் உறவுகளும் எந்தன் வாழ்வினில் இணைந்த வரங்களே! என்று கூறிவிட்டு,

வரமென வளர்ந்திடும் மரங்களை அழித்துத் தரமான தண்ணீரும் தளிர்ப்பும் இழந்து நிறைந்திடும் கழிவும் நெகிழியும் குவித்திட, மறைந்திடும் சந்ததியின் வளமான வாழ்வே! என ஆதங்கப் படுகிறார் இந்நூலாசிரியர்!

இக் கவிதையின் ஈற்றிலே, எனைத் தாங்கும் எந்தன் புவித்தாயே! உனைநான் நாளும் உயர்வாய்க் காப்பேனே!

என்று இக்கவிதையை முடிக்கிறார். அடுத்து நெஞ்சே எழுந்திரு என்னும் இன்னொரு கவிதை, இலக்கியம் காலத்தின் கண்ணாடி என்பதைத் தொட்டுக் காட்டுகிறது! தாய்நாட்டின் நிலவும் துன்பங்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது!பஞ்சம் படர்ந்ததும் நெஞ்சமது நொந்து, நெகிழ்ந்திடும் நேரமிது! என்றும் கூறிவிட்டு, அன்றாட உணவுக்கு அலைந்திடும் அல்லலை வென்றிட முடியாமல், விலைகளும் ஏறுது! என்றும், எரிபொருள் இலையெனும் நிலைகளும் நீளுது! வரிகளும் வறுமையும் வலிமையாய் வாட்டுது! எனக்கூறி இன்றைய இடர்களை கவிவரிகளில் கோடிட்டுக் காட்டப் படுகிறது என்பதும் இந்நூலின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும்!

மேலும், கைநூலாகும் முகநூல் எனும் கவிதை, புதுமைகள் போற்றிடும் புத்தாக்கச் சிந்தனையும் பூவுலகில் வளர்த்திடப் புத்தூக்கமும் தந்திடும்! கத்தியாகிக் கழுத்தினையும் கணப்பொழுதில் அறுத்திடும்! என்னுரைத்த பின்னர், இளையோரின் காரங்களிலே பிழையாகவும் புரண்டிடும், மாயையிலே மங்கையரைப் புதைத்திடவும் செய்திடும்!

கவலைகள் நீக்கிடக் கைமருந்தாகவும் அமைந்திடும்! என்று கூறிவிடுகிறது இக் கவிதை! எட்டடி நிலமே கிட்டிடும் இறுதிக் கவிதை கூறி விடுகிறது. இக்கவிதை வாழ்வின் நிலையாமையை கட்டழகு மேனியும் பட்டெனச் சாய்ந்திடின், முற்றிலும் விலகிடும்! கட்டாயம் கழன்றிடும்! என்று குறிப்பிட்டு விடுகிறது!

உண்மையில் இந்நூலில் இடம் பெற்றிருக்கும் அத்தனை கவிதைகளும் வாழ்வோடு ஒன்றித்த மனித உணர்வுகளையும் தொட்டிடும் கருத்தை உணர்த்திச் செல்கின்றது என்றால் மிகையாகாது!

ஆகவே கவிதை இரசிக்கும் தாகமுடையோர் இந்நூலையும் சுவைத்திட வேண்டும் என, என் கருத்தினைப் பகிர்ந்து கொள்கிறேன்!

அது மட்டுமல்ல, இந்நூலாசிரியர் இலக்கிய உலகுக்கு இன்னும் பல நூல்களைத் தந்திட வேண்டும் எனவும் வேண்டிக் கொண்டு விடைபெறுகிறேன்!

# அழகான ஆபத்து



கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீரால் சூழப்பட்ட அலைகடல் பூமிப்பந்தின் பொக்கிஷம் ஆகும். உலகின் பெரும்பாலும் கடலால் சூழப்பட்டது. கடல் என்பது அழகியல் அம்சங்கள் பல நிறைந்த பகுதியாகும். பூமியின் மூன்றில் இரண்டு பாகம் கடலால் சூழப்பட்டது. உலகின் மேற்பரப்பில் அமைந்துள்ள பெருநீர்ப்பரப்பு ஐந்து பெருங்கடல்களாக பிரிக்கப்பட்டுள்ளது. தமிழில் கடலை முந்நீர் என்று குறிப்பிடுகின்றனர். அதற்குக் காரணம் ஆற்று நீர், மழைநீர், நிலத்தடி நீர் ஆகிய மூன்று மூலங்களிலிருந்து கடலானது நீரைப்பெறுவது ஆகும்.

அத்துடன் கடல் பல உயிரினங்களின் வாழ்விடமாக இருப்பதுடன் பல வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. கடலில் கண்ணுக்கு தெரியாத பக்டீறியா முதல் பலதரப்பட்ட உயிரினங்கள் வாழ்கின்றன. கடலில் உப்பு, புரோமின், கந்தகம், மக்னீசியம், இரும்பு, பொட்டாசியம், யுரேனியம் போன்ற பல கனிப்பொருட்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இத்தகைய வளங்களை தன்னகத்தே கொண்டுள்ள அற்புதமான படைப்பானது எவ்வளவு அழகாக உள்ளதோ அதனைவிட பன்மடங்கு ஆபத்துக்களை பல பரிமாணங்களில் கொண்டுள்ளமையை மறுக்க

ச. தனுஷ்கா
இரண்டாம் வருடம் ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



முடியாது. உயிரை பறிக்கும் விஷமீன்களின் வாழ்விடமாகவும் இச்சமுத்திரம் உள்ளது.

கடலில் காணப்படும் மீன்வகைகளில் வினோதமாக காட்சியளிப்பது 'பேத்தைமீன்'. இதற்கு 'தவளைமீன்', 'முள்ளம்பன்றிமீன்' என பல்வேறு பெயர்கள் உண்டு. இந்த மீனை ஆங்கிலத்தில் 'பப்பர் பிஷ்' (Puffer Fish) என்பர். அதிகளவு நச்சுத்தன்மை கொண்ட மீன்களில் இதுவும் மிக முக்கியமான ஒன்றாக அறியப்படுகின்றது. இதன் விஷத்தால் 30 மனிதர்களை கொல்ல முடியும். இதன் தோல் பகுதியிலும், உடலின் உள்ளுறுப்புக்களான குடல், கல்லீரலில் சயனைட்டை விடவும் 1200 மடங்கு விஷத்தன்மையுள்ளது. இவ்வகை மீன் 121 வகையாக இருக்கின்றன. இதில் 120 வகையான மீன்கள் விஷத்தன்மை வாய்ந்தவை. இந்த பேத்தை மீனானது மனிதர்களைப்போன்று பற்கள் உடையது. இதனால் தான் இதன் விலங்கியல்





பெயர் 'டெட்ராடான்' என்று அழைக்கப்படகிறது. டெட்ராடான்' என்பதற்கு லத்தீன் மொழியில் நான்கு பற்கள் என்று அர்த்தமாகும். எத்தகைய கடினமான பொருட்களையும் இதன் பற்களைக்கொண்டு இலகுவாக உட்கொள்ள முடியும். இதன் இரு கண்கள் 360 டிகிரி சுற்றி பார்க்கும் தன்மை உடையது. குளிர் அதிகம் உள்ள பகுதிகளை விட பிற பகுதிகளில் இவை வாழ்கின்றன என்று கூறப்படுகிறது. இதனை தாக்க வரும் எதிரிகளை பயமுறுத்தும் வகையில் கடல் நீரை உள் இழுத்து பலூன் போன்ற தன் உடலை 10 மடங்கு பெரிதாக்கும். தண்ணீரிலிருந்து வெளியேயும் இதனால் தன்னுடலை பெரிதாக்க முடியும். வளியை தன்னுள் உள்ளெடுப்பதன் மூலம் உடலை பெரிதாக்கும் ஆற்றல் உடையது.

பல விசித்திரங்களையும், விஷத்தன்மையையும் கொண்ட இந்த 'பேத்தை மீன்' வகையானது பல நாடுகளில் உண்ணத்தடை விதித்துள்ள போதிலும் ஜப்பான் நாட்டில் இந்த மீனில் ஒரு வகையான 'குரபர' எனப்படும் மீனினத்தை உண்ணும் வழக்கத்தை பரவலாக கொண்டுள்ளனர். எவ்வாறாயினும் இதனை உட்கொண்ட பல ஜப்பானியர்கள் இம்மீனின் விஷத்தால் பாதிக்கப்பட்டு இறந்தமை குறிப்பிடத்தக்கது. இந்த மீனை சமைப்பதற்காக மூன்று தொடக்கம் நான்கு வருட காலம் வரை பயிற்சி எடுக்கப்படுகிறது.

பயிற்சியின் பின்னர் அரசினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட சான்றிதழ் மற்றும் உரிமம் வழங்கப்படுகிறது. இவ் உரிமம் உடைய சமையல் நிபுணர்களால் மாத்திரமே இம்மீனானது முறையாக சமைக்க முடியும். இம்மீனை சமைக்கும் முறையில் மிக அவதானமாக இருப்பது மிக அவசியமாகும். ஏனெனில் இந்த மீனின் குடல் மற்றும் கல்லீரல் போன்ற பகுதிகளில் 'Trodotoxin' என்ற கொடிய விஷத்தன்மை உள்ளது. இது மீனை சுத்திகரிக்கும்போது அல்லது சமைக்கும்போது ஆபத்தை விளைவிக்கக்கூடியாது ஜப்பானியர்கள் இம்மீனை அதிகமாக சலாது போன்று உண்ணும் பழக்கத்தை கொண்டுள்ளனர்.

இம்மீனை உட்கொள்ளும்போது முழுமையாக அம்மீனின் விஷத்தன்மை நீக்கப்படுகிறது என்று கூற முடியாது. மீனின் தசைகளில் மரணத்தை ஏற்படுத்தாத குறைந்தளவான விஷமுள்ளது. மரணத்தை ஏற்படுத்தக்கூடிய அதிகளவு விஷமுள்ள பகுதிகள் அகற்றப்பட்ட பின்னரே இவை சமைக்க உகந்தவையாக உள்ளது. ஜப்பானில் ஆண்டுக்கு 1000 டொன் அளவுக்கு உணவுக்காக இம்மீன் விற்பனை செய்யப்படுகின்றது.

'பப்பர் பிஷ்' உணவுக்காக மாத்திரமின்றி அலங்காரம் மற்றும் அழகிற்காகவும் வீடுகளில் மீன் தொட்டிகளில் வளர்க்கப்படுகின்றது. இம்மீன் கடித்தால் இதன் விஷத்தன்மையானது உடலின் நரம்பு மண்டலங்களை செயலிலக்கச்செய்து மரணத்தை ஏற்படுத்தும். அண்மையில் இலங்கையில் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் குறித்த மீனை உட்கொண்ட ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் மூவர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது.

கடலில் உள்ள அனைத்து மீன்களும் உண்ணத்தகுந்தவையல்ல என்ற விழிப்புணர்வு இன்மையால் உயிரிழப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மேலைநாடுகளில் குறித்தவகை மீனை சமைப்பதற்கென தனியாக கற்கை நெறியுள்ளமை நம்மவர்களுக்கு தெரிவதில்லை. சமுத்திரம் அழகான ஆபத்துக்களையும் தன்னகத்தே கொண்டுள்ளமை மறுக்கமுடியாத உண்மை.

# INTERNATIONALLY RECOGNIZED PROGRAMMES



## DIPLOMA & HND PROGRAMS

- Teacher Training
- Spoken English
- AMI Montessori
- Business Management
- Counselling & Psychology
- Care Giver / Child Care
- IT/ Computer Programs

## DEGREE PROGRAMS



- Bachelors in Psychology
- Bachelor of Education
- BBA / MBA
- BA in English
- BSC IT

- UGC Recognized
- Every Year Convocation
- Flexible Payment Options
- Study From Anywhere

Final Year Direct Entry

UGC RECOGNIZED | WES WORLD EDUCATION SERVICE

CERTIFICATE › DIPLOMA › HND › DEGREE › MASTERS

HOTLINE

+94765 204 604 | +94770 822 218
+94765 204 605 | +94778 877 907

### OUR RECOGNITIONS

TVEC – Tertiary & Vocational Education Commission – Registered Training Institute

othm qualifications

City & Guilds – Approved Centre

UK SKILLS AWARDS

Member of: PTPA – Private Training Providers Association – Sri Lanka

EPlus Exams – YOUR SKILLS & KNOWLEDGE CERTIFIED

அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்
Government Recognised Certificate

BRITISH COUNCIL – TRAINED AGENT

idp IELTS

LINCOLN UNIVERSITY COLLEGE MALAYSIA

WICHITA STATE UNIVERSITY USA

CHINA THREE GORGES UNIVERSITY

bcs – The Chartered Institute for IT

ISO 9001:2015

IIC UNIVERSITY OF TECHNOLOGY

CITY UNIVERSITY MALAYSIA

IIC UNIVERSITY OF TECHNOLOGY CAMBODIA

UNIVERSITY OF WINCHESTER

VARNA UNIVERSITY OF MANAGEMENT BULGARIA

Member of: FITIS

## AMAZON COLLEGE
INTERNATIONAL CAMPUS

294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka.
+94112 591 110 | info@amazoncollege.lk
www.amazoncollege.lk

# நேர்காணல்



## சிரேஷ்ட அறிவிப்பாளரும், எழுத்தாளருமான நாகபூஷணி கருப்பையா அவர்களுடனான நேர்காணல்

சிரேஷ்ட அறிவிப்பாளரும் பெண் எழுத்தாளருமான நாகபூஷணி அவர்கள் கருப்பையா தேசிகர் தம்பதிகளுக்கு நான்காவதாகப் பிறந்தவர். அறிவிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் தயாரிப்பாளராகவும் வானொலியில் தனது பயணத்தை ஆரம்பித்த இவர் தொலைக்காட்சி செய்தி வாசிப்பு, நிகழ்ச்சித் தொகுப்பு, விளம்பரம், மேடை நிகழ்ச்சி தொகுப்பு என தன் பங்களிப்பை விஸ்தரித்துக் கொண்டார். ஊடகத்துறை கற்கை நெறிகளுக்கு விரிவுரையாளராக சமுகமளிப்பதுடன் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனப் பயிற்சிப் பிரிவில் அறிவிப்பாளர்களுக்குப் பயிற்சி வழங்குவதிலும் தனது பங்களிப்புக்களை செய்து வருகிறார்.

இவர் தற்போது "வசந்தம் தொலைக்காட்சியில் நினைத்தாலே இனிக்கும்" என்ற நிகழ்ச்சியினைத் தொகுத்து வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

நேர்காணல்: **மஜினா உமறு லெவ்வை**
மாவடிப்பள்ளி

**01. உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்.**

பதில் : கம்பளையில் ஆரம்பக்கல்வியைக் கற்ற நான் தந்தையின் தொழில் நிமித்தம் நாவலப்பிட்டியில் குடியேறியதால் கதிரேஷன் கனிஷ்ட வித்தியாலயத்தில் எனது கல்வியை தொடர்ந்து பின்னர் சாதாரண தரத்தை "சென் அன்றூஸ் பாலிகா" மகா வித்தியாலயத்தில் கற்றேன். அதன் பின்னர் "கதிரேஷன் மத்திய கல்லூரியில் உயர்தரத்தினைப் பூர்த்தி செய்து யாழ் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானேன். அங்கு தமிழ் சிறப்பு கலைமாணி BA(Hon) பட்டம் பெற்று பின்னர் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபன பிராந்திய சேவையான கண்டி மலையக சேவையில் சிறிது காலம் அறிவிப்பாளராக பணியாற்றினேன். அதன் பின்னர் கொழும்பில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கல்விச்சேவையில் தயாரிப்பாளராக பணியாற்றிய சந்தர்ப்பத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் "இதழியல் டிப்ளோமா" கற்கை நெறியினையும் பூர்த்தி செய்தேன்.

**02. ஊடகத்துறையில் மட்டுமன்றி இலக்கியத்துறையிலும் எப்படி ஆர்வம் ஏற்பட்டது?**

பதில்: இலக்கியத்துறையில் ஈடுபடுவதற்கான ஆர்வம் சிறு வயது முதலே வாசிப்பின் மீதான அலாதிப் பிரியத்தினாலும் தந்தையின் ஊக்கப்படுத்தலினாலும் அண்ணன்மார்கள் புத்தகங்கள் வாங்கித்தருவதில் ஆர்வம் காட்டியதாலும் தானும் எழுத வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இந்த வாசிப்பும் ஆர்வமும் தந்தையின் தூண்டுதலும்தான்









இலக்கியத்தின் பால் ஈடுபாட்டினை அதிகரிக்க காரணமாய் அமைந்தது.

**03. உங்களது ஆக்கங்கள் பற்றி கூறுங்கள்**

பதில்: மெல்லிசைப்பாடல்கள் மற்றும் பக்திப்பாடல்களும் எழுதி உள்ளதுடன், இந்த துறைக்கு நான் வருவதற்கு முன்னமே பத்திரிகைகள், சிறு சஞ்சிகைகள், வானொலி என்று, எதையும் விட்டுவைக்காமல் எழுதிக் கொண்டிருந்தேன். டயலாக் சேவை, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவை மற்றும் பொது வைத்திய சாலையிலும் எனது குரலில் அறிவிப்பினை கேட்கலாம்.

**04. நூல் வெளியீடு பற்றி கூறுங்களேன்.**

பதில் : அன்பு நண்பி அமரர் கலைமகள் ஹிதாயா எனது ஆரம்ப கால கவிதைகளை தொகுத்து வெளியிடுவதில் ஆர்வம் காட்டியது தனக்குள்ளும் ஒரு விருப்பைத் தூண்டிவிட்டதால் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் எழுதிய கவிதைகளைத்தான் பின்னாட்களில் "நெற்றிக்கண்" என்ற தலைப்பில் கவிதைத் தொகுப்பாக ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளேன் பல்கலைக்கழக இறுதி ஆண்டில் சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரையை நூலுருவாக்கம் செய்யும் பணியை சகோதரர் திலகர் அவர்கள் மேற்கொண்டுள்ளார். விரைவில் நூலாக வெளிவர இருப்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

**05. இதுவரை உங்களுக்கு கிடைத்த விருதுகள் ?**

பதில் : "சிறந்த தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் விருது"
"சிறந்த தொலைக்காட்சி நிகழ்ச்சித் தொகுப்பாளர் விருது"
"சாகித்திய விருது"
"சிறந்த வானொலி அறிவிப்பாளர் அரச விருது"
"சிறந்த வானொலி செய்தி வாசிப்பாளர் அரச விருது"

போன்ற பல விருதுகள் கிடைத்துள்ளன. மேலும் இலக்கியத்துறைப் பயணத்தில் மலேசியா நாட்டிலே கோலாலம்பூரில் நடைபெற்ற "சர்வதேச தீபாவளி பாட்டெழுதும் போட்டியில் 2ம் இடம்" கிடைத்து சான்றிதழும் வழங்கப்பட்டது.



**06. இலக்கியத்துறையில் மட்டுமன்றி ஊடகத்துறையிலும் ஆர்வம் ஏற்பட்ட உங்கள் அனுபவங்கள் ?**

பதில் : வானொலி என்பது எனது குடும்பத்தாரின் விருப்பத்திற்குரிய ஒன்றாக இருந்ததால் அன்றைய காலகட்டத்தில் இலங்கை வானொலி வெளியிடும் சஞ்சிகையைக்கூட விட்டு வைக்காமல் அதிலிருந்த மலையக ஒலிபரப்பிற்கான விண்ணப்பப் படிவத்தை ஒரு ஆர்வக்கோளாறில் பூர்த்தி செய்து அனுப்பினேன் எதிர்பாராத விதமாக தெரிவு செய்யப்பட்டு. கொழும்பில் தலைமைக்காரியாலயத்தில் குரல் தேர்வு, நேர்முகப்பரீட்சை ஆகியவற்றில் தெரிவாகினேன். அங்கு பயிற்சி பெறும்போது மதிப்பிற்குரிய திரு. மதியழகன் அவர்கள் அங்கேயே கடமைபுரியும்படி ஊக்கப்படுத்தினார். அரச. ஐயாத்துரை அவர்கள் கல்விச்சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக தெரிவுெ சய்தார். இப்படி ஆரம்பமானது தான் ஊடகப்பயணம்.






**07. வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர்களுக்கும் இளம் ஊடகவியலாளர்களுக்கும் நீங்கள் கூற விரும்புவது?**

பதில் : தன்னம்பிக்கையற்றவர்களினதும், தமது திறமையை வளர்த்துக்கொள்ள இயலாதவர்களினதும் தாக்குதல்கள் ஏதோவொரு வடிவில் நம்மை துரத்திக்கொண்டும் தாக்கிக் கொண்டும்தான் இருக்கும். இவற்றில் நமது






கவனத்தை சிதற விட்டு விடாமல் நமக்கான கடமைகளை செவ்வனே செய்வோமேயானால் நமது வெற்றிப்பயணத்திற்கு இறைவன் துணையிருப்பான். மேலும் நாம் நேசிக்கின்ற துறையில் அர்ப்பணிப்பு அவசியம். அதுசார்ந்த நமது தேடலையும், கற்றலையும் விசாலப்படுத்த வேண்டும்.

தமிழ் ஊடகத்துறைக்கும், இலக்கியத்திற்கும் அடித்தளம் தமிழ் மொழி. அது பிழைபடாதவாறு பிரயோகிக்கப்படவேண்டும். ஆர்வம் இருக்கிறது. களமும் இருக்கிறது என்பதற்காக எதையும் படைக்கலாமென இறங்கி விடக்கூடாது. திருந்தச்செய்ய வேண்டும். அத்தகையோரின் பெயரும் புகழும்தான் இன்று வரை நிலைத்திருக்கின்றது. இல்லாவிடில் கால வெள்ளத்தில் காணாமலாக்கப்பட்டுவிடுவோம். ஆர்வத்தோடு நீங்கள் படைப்பவை பாராட்டை மட்டுமே பெற வேண்டுமென நினைக்காதீர்கள். இப்போதெல்லாம் முகநூலில் போலிப் புகழுரைகள் மலிந்து விட்டன. விமர்சனங்கள் வந்தால் சோர்ந்து போகாமல் அவற்றை வெற்றிக்குப் பாதையமைத்து பயணியுங்கள்.

**08. துணிந்தெழு சஞ்சிகை பற்றி உங்கள் கருத்து?**

பதில் : துணிந்தெழு சஞ்சிகையின் பெயரே அசத்தல்தான். கேட்ட மாத்திரத்தில் நேர்மறை எண்ணத்தையும் உத்வேகத்தையும் தருகின்ற பெயர். அதற்கேற்றாற் போல் ஆக்கங்களும் அறிமுகங்களும் சஞ்சிகைக்கு எனது வாழ்த்துக்கள்.

**இலக்கியத்துறையில் மட்டுமன்றி ஊடகத்துறையிலும் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்று பயணித்துக் கொண்டிருக்கும் சிரேஷ்ட ஊடகவியலாளர் பெண் எழுத்தாளர் சகோதரி நாகபூஷணி அவர்களுக்கு எங்கள் சஞ்சிகை சார்பாக வாழ்த்துக்கள்.**





# இருக்கும் பொழுது இல்லாத

## பெறுமதி இறந்த பின் ஏனோ

எச்.டீ.எச். பஹ்தா

அன்று மதிய உணவுக்கு ராஜா வீட்டிற்கு வருகிறான். மனைவியிடம் ஏதோ பதில் எதிர்ப்பார்த்தவனாக, அவள் தலையை தாழ்த்திய வண்ணமாக உணவு பரிமாறினாள். திடீரென அவன் மனைவியைப் பார்த்து என்ன முடிவு வெச்சிருக்கே நான் கேட்ட கேள்விக்கு பதில் எங்கே என்று கத்தினான்.

நான் மறுபடியும் கேட்கிறேன். நான் வேலை செய்ற அலுவலகத்தில் வேலை செய்யும் ஜெஸிய விரும்புகிறேன் அவள கல்யாணம் பண்ணிக்க போறன். நீ எனக்கு எப்ப விவாகரத்து தரப்போர அத முதல்ல சொல்லு.

கண்கள் குளமான அவனுடைய மனைவி கத்திக் கூச்சலிட்டாள். அவனும் கடுங்கோபமாக சென்று விட்டான். மறு நாள் காலையில் வீடு வந்தான். மனைவி ஒரு முடிவுடன் நிற்பதைப் பார்த்தான். நீங்க நேத்து நைட்டு எங்க தங்கினீங்க. நான் ஜெஸி வீட்ல தான் இருந்தேன். சரிங்க இந்த டிவோர்ஸ் பத்திரத்துல கையெழுத்து வேனும்னா ஒரு மாதத்துக்கு நான் சொல்றத நீங்க கேக்கனும். ஹ்ம் சரி சொல்லு என்ன செய்யனும். எங்களுக்கு ஒரு பையன் இருக்கான். அவன் முன்னாடி என்னோட அன்பா இருக்கனும்.

அவனுக்கு சிறந்த அப்பாவ இருக்கனும். ஒவ்வொரு நாளும் எனக்கு உணவு ஊட்டனும். என்ன திட்டக் கூடாது.

ஜெஸி வீட்டுக்கு போகக் கூடாது. ஆபீஸ் கு போகக் கூடாது. இத சரியா கட பிடிச்சீங்கன்னா நான் உங்களுக்கு டிவோஸ் தருவேன். என்று பெருமூச்சு விட்ட படியே கூறி முடித்தாள். அவனும் ஒப்புக் கொண்டான்.

அவள் சொன்னது போலவே வேண்டா வெறுப்போடு அவன் அன்பாக நடந்து கொண்டான் நான்கைந்து நாட்களில் அவனை அறியாமலேயே மனைவி மீதும் மகனின் மீதும் அன்பு ஏற்பட்டது. ஆனாலும் ஜெஸியை மனதிலே நிறுத்திக் கொண்டான். நாட்களும் நகர்ந்தன திருமணமான புதிதில் மனைவியை ரசித்தவன்.இப்போது தான் அவளை மீண்டும் ரசிக்க ஆரம்பித்தான். அவளுடைய கூந்தலின் நீளம் குறைந்து இருப்பதையும், உடல் எடை குறைந்திருப்பதையும் அவதானித்தான்.அந்த ஒரு மாதத்தில் அவளும் அவளால் முடியுமான அன்பைப் பகிர்ந்தாள்.

ஒரு மாதம் முடிய அவன் ஜெஸிகாவை பார்க்க சென்றான். ஜெஸிகாவைப் பார்த்து அவன் என்னை மன்னித்து விடு நான் மறுபடியும் என் மனைவியோடு என் வாழ்க்கையை ஆரம்பிக்கப் போகிறேன்.

என்று கூறி விட்டு அவளுடைய பதிலை எதிர்பார்க்காதவனாய் சட்டென திரும்பி வீட்டிற்கு புறப்பட்டான். தன் மனைவியிடம் நல்ல செய்தி சொல்ல வேகமாக வண்டியை ஓட்டி வந்தான். மேசை மேல் இருந்த விவாகரத்துப் பத்திரத்தில் அவளின் கைரேகையை கண்ட கணவன் மனைவியை தேடினான். அங்கே அவள் இருக்கவில்லை. கண்களை துடைத்த படி நின்றிருந்த மகனிடம் அம்மா எங்கே என வினவினான்.

அம்மாக்கு வாயிலிருந்து ஒரே ரத்தம் அப்பா அம்மாட ப்ரண்ட் பிரியா ஆன்டி அம்மாவ ஆஸ்பிடில் அழைச்சிட்டு போனாங்க என்று மகன் சொல்லி முடிக்க முன்னே அவன் ஆஸ்பத்திரிக்கு விரைந்தான். பிரியாவிடம் மனைவியை பற்றி விசாரித்தான். அவள் வெள்ளைப்பிடவையால் மூடியிருந்த மனைவியின் உடலை திறந்து காட்டினாள். அவன் கண்கள் குளமாக பேச்சு வராமல் தடுமாறினான். பிரியா கதைக்கத் துவங்கினாள்.

உங்க மனைவிக்கு கேன்ஸர். இத கேள்விப்பட்டா நீங்க கஷ்டப்படுவீங்கண்டு மறச்சிட்டா அதனால் தான் கடைசி நேரத்த உங்களோட சந்தோசமா கழிக்க ஆசப்பட்டா என்று சொல்லி முடித்தாள். அவளுடைய இன்னொரு ஆசை என்னவென்றால் நீங்க உங்க பையன்கு சிறந்த அப்பாவ இருக்க வேண்டும் என்று கூறி முடித்தாள்.



# பட்டுப்போன பட்டாம்பூச்சிகள்

ஷாஜஹான் பாத்திமா ஷாமா

போதை கொண்ட அரக்கர்களின்
பூத மனக்கோரத்தால்
மா தவமிருந்து பெற்றெடுத்த
மாக்கொடிகள் கருகினவே.

மொட்டவிழ்ந்து மணம் பரப்பி
மெட்டுக்கட்டி பாடும் முன்னே....
பட்டுப்போன பட்டாம் பூச்சிகளாய்
பாரினில் பிணமாய் மாறினரே...

விதை வெடித்து துளிர் விட்டு
விருட்சமாய் மாறும் முன்னே...
சதை கிழித்து செந்நீர் சிந்தி
உருக்குலைந்து போனனரே....
காமுகர் பிடியினால்.

போதை எனும் விஷம் கொண்ட
பாரினில் வாழும் ஜந்துக்களுக்கு
ஐந்தும் தெரியவில்லை...
ஐம்பதும் தெரியவில்லை...

கண்ணாகக் காக்க வேண்டிய
பொன்னான பெண் வாழ்க்கை...
விண்ணாளச் செல்லாமல்
மண்ணாகிப்போனதுவே...

உதவி எனும் பெயரால் உறுத்தும்
உறவுகள் உறுப்புகளை மட்டுமே
வெறித்துப் பார்க்கும்
போதைக்கண்கள்.

துள்ளித்திரியும் பள்ளிவயதினிலே
நரியாய் நடிக்கும் வெறிக் கூட்டம்
விரித்த வலையில்
சிக்கித்தவிக்கும் புள்ளிமான்கள்.

பெற்ற தகப்பன் கற்றுத்தந்த ஆசான்
நெருங்கிய பந்தம் தூரத்து சொந்தம்
அப்பாவின் நண்பன்
அடுத்த வீட்டு மாமா என்று
நேசக்கரம் நீட்டுவதாக சொல்லி
பாசக்க கயிறால் கழுத்தை நெறிக்கின்றனர்.

நெருப்பென்று அறியாமல்
வெளிச்சத்தை மட்டும் பார்த்து
விளக்கை சுற்றி வந்ததால்
பொசுக்கப்பட்டன இந்த விட்டில் பூச்சிகள்.

போதை ஒழிப்போம் என்று
ஒலிக்கும் கோஷங்கள் எல்லாம்
பேதையிவள் சீரழிக் கப்பட்ட
சிறு நிமிடங்கள் மட்டும் தான்
மறு நிமிடம் மறந்தே போகும்
சுயநல உலகமிது.

ஆகையால் பெண்ணே!! நீ விழித்தெழு...
உன்னைக் காக்கும் ஆயுதம் ... நீ மட்டுமே.

நீ வெற்றி கான வேண்டுமாயின்
உன் நெற்றிக்கண்ணை அகல விரி நீ ஓர் சுடரி...
உன்னைத்தொட்டால் நீ சுட்டெரி...

விழிக்கட்டும் பேதை... ஒழியட்டும் போதை...
உடையட்டும் அரக்கர் மமதை- அப்போதுதான்
படைக்கப்படும் புதிய சரிதை...

துணிந்தெழு

sky தமிழ்
Media Network

ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවට්) ලිමිටඩ්


# sky தமிழ்
# AWARDS QATAR
# -2023-

**Print Media Partner :**

தினகரன்

தினகரன் வாரமஞ்சரி







# சவூதியில் பெண்களுக்கான வாள் சண்டையிற்கான முதற் பெண் பயிற்சியாளராக நூரா அல்-ஜபார்



றிப்னா
மாவனல்லை

நூரா அல்-ஜபார் ஒரு குதிரையேற்றம் மற்றும் வாள் சண்டை வீராங்கனையாவார். இவர் சவுதி அரேபியாவின் முதல் அங்கீகரிக்கப்பட்ட குதிரையேற்றப் பயிற்சியாளராகவும் மேலும் பல சவுதி பெண்களுக்கு முன்னுதாரணமாகவும் மாறியுள்ளார். இதற்கான பயிற்சி நிலையமானது சவுதியில் தம்மாம் எனும் இடத்திலேயே காணப்படுகிறது. இங்கே தான் பெண்களுக்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இங்கு ஆண்கள் ஆதிக்கம் செலுத்தும் விளையாட்டில் நுழைய விரும்பும் பெண்களை வரவேற்று அவர்களுக்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

மேலும் பயிற்சியாளர்களை பற்றி குறிப்பிடுகையில் "பல பெண்கள் குதிரையேற்றம் கற்க விரும்பினாலும் குதிரை சவாரியில் முன் அனுபவம் இல்லாமலே இங்கு வருகிறார்கள். இதற்குப் பின்னால் உள்ள முக்கியக் காரணமானது அவர்களுக்கு நிறைய ஓய்வு நேரம் இருப்பதும், இந்த நேரத்தை அவர்கள் சரியாகப் பயன்படுத்தாமல் இருப்பதுமே ஆகும். சவூதி அரேபியாவிலே வலிமையான பெண் ஆண்களுக்கு நிகரானவள் ஆவாள். எனவே மற்ற பெண்களும் இதில் ஈடுபடவும் அவர்கள் தங்கள் நேரத்தை பயனுள்ளதாக செலவிடவும் என்னால் ஊக்கப்படுத்த முடியும் என்று நம்புகிறேன்." எனக் கூறினார்.

மேலும் இப் பயிற்சியானது பாரம்பரியத்தில் மூழ்கியிருக்கும் கலைக்கு புத்துயிர் அளிக்க கூடிய

ஒரு முறையாக அவர் நம்பினார். இதில் பயன்படுத்தப்படும் அரேபிய வாள் அல்லது "சைஃப்" ஆனது தீபகற்பத்தில் ஏறக்குறைய 7 ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் அதன் கொக்கி போட்ட பொம்மல் மற்றும் வளைந்த விளிம்பிற்கு பெயர் பெற்றதாகவும் திகழ்கிறது.

இப் பயிற்சியை பற்றி அவர் தெரிவிக்கையில் "இது எனக்கு ஒரு பொழுதுபோக்காக தொடங்கியது, ஆனால் அரேபிய கையெழுத்துப் பிரதிகளைப் நான் படிக்க தொடங்கினேன் அதன் பிறகு நான் இக் கலையை ஒரு புதைக்கப்பட்ட பாரம்பரியமாகப் பார்க்க ஆரம்பித்தேன். இதன் காரணமாக இந்த இழந்த பாரம்பரியத்தை நாங்கள் மீட்டெடுத்தோம் ஆகவே நாம் இதை அரேபியர்கள் மற்றும் உலகம் முழுவதும் பரப்புவோம் என்று நம்புகிறோம்." என்று கூறினார்கள்.

# சின்ன இடம் இருந்தால் போதும்

## ஹில்மி - கத்தார்

பிசினஸா.... எனக்கும் அதற்கும் ரொம்ப தூரம்... இதைப்பற்றி எனக்குத் தெரியாது... எனக்கு சப்போர்ட் பண்ண யாரும் இல்லை... என்ற எண்ணம் கொண்டிருப்பவர்களா? இதைக் கொஞ்சம் வாசித்துப் பாருங்கள். நீங்கள் விரும்பும்



வணிகமாக இருந்தால், உங்களுடைய இலக்கு தெளிவாக இருந்தால், நீங்கள் கடினமாக உழைக்க தயாராக உள்ளீர்கள் என்றால், எந்த துறையிலும் உங்களால் வெற்றி முத்திரையைப் பதிக்க முடியும்.

நீங்கள் எந்த துறையில் உங்களது வணிகத்தை ஆரம்பிக்க தயாராக இருக்கின்றிர்களோ அந்த துறை பற்றிய முழுமையான அறிவை பெற்றிருக்க வேண்டும். இதற்காக நீங்கள் தெரிவு செய்த துறையில் குறைந்தது 06 மாதம் தொடக்கம் 01 வருடமாவது வேலை செய்திருக்க வேண்டும். அப்போதுதான் அந்த வணிகம் பற்றிய சிறிய அறிவேனும் உங்களுக்கு கிடைக்கும் அதோடு அந்த வணிகத்துறையில் ஏற்படுகின்ற பிரச்சினைகள், இலாப நஷ்டம், சந்தைப்படுத்தல் போன்ற தகவல்களையும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

இந்த அறிவுகளை நீங்கள் பெற்றுவிட்டீர்கள் என்று உறுதிப்படுத்திக் கொண்டால் உங்களது வணிகத்தை தொடங்குங்கள் வணிகத்துறையில் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஒரு விடயம் என்னவென்றால் வணிகத்திற்கான சிறந்த பெயர் இந்த பெயரை நீங்கள் தெரிவு செய்யும் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் அந்த பெயரானது படித்தவர்கள் முதல் படிக்காதவர்கள் வரை நன்றாக உச்சரிக்கும் படியாக அமைய வேண்டும்.

என்னதான் வணிகத்தை ஆரம்பித்தாலும் விளம்பரம் என்பது முக்கியமான ஒன்றாக மாறிவிட்டது உங்களது வணிகம் பற்றிய

அறிமுகத்தை நீங்கள் எந்தளவிற்கு மக்கள் மத்தியில் கொண்டு செல்கின்றீர்களோ அந்தளவிற்கு உங்களுக்கு வெற்றி என்பது கிடைத்து கொண்ட இருக்கும். இதற்காகத்தான் பெரிய பெரிய வணிகத்துறைகள் கூட அவர்களது வணிகத்தை ஆரம்பிப்பதற்கு முன் இருந்தே அவர்களது வணிகம் பற்றி விளம்பரப்படுத்த ஆரம்பித்துவிடுவார்கள். அதேபோன்று தான் நீங்களும் உங்களது வணிகத்தை உங்களது வீட்டினுள் துவங்கினாலும். கூட இந்த விளம்பரப்படுத்தல் மூலமாக நீங்கள் அதிகளவான வாடிக்கையாளர்களை பெற்றுக் கொள்ள முடியும்.

நீங்கள் பெற்றுக் கொள்ள கூடிய வாடிக்கையாளர்கள் தான் உங்களது வணிகத்தின் வெற்றி தூணாக இருக்கக் கூடியவர்கள். ஏனென்னென்றால் ஒரு வாடிக்கையாளரிடம் நீங்கள் உங்களது நன்நடத்தை மற்றும் உங்களது வியபாரத்தில் சிறந்த அறிவைப்பற்றி தெளிபடுத்தும் சமயத்தில் அவர்கள் ஊடாகவே பல்லாயிரக் கணக்கான வாடிக்கையாளர்களை நீங்கள் பெற்றுக் கொள்ள முடியும். இதனால்தான் பெரிய வணிகத்துறைகளில் கூட Customer Care என்ற Officeஐ உருவாக்கி வைத்திருக்கின்றார்கள்.

ஒரு வணிகத்தின் வெற்றிக்கு எந்த அளவிற்கு வாடிக்கையாளர்கள் முக்கியமோ அதை போன்று உங்களது வணிகத் துறையில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களும் மிக மிக முக்கியமானவர்கள். அவர்களுடன் நீங்கள் சிறந்த தொடர்புகளை மேற்கொள்ளும் போது இன்னும் உங்களது வணிகத்தை மேம்படுத்த அவர்களும் உங்களுக்கு உதவக்கூடியவராக இருப்பார்கள்.

மேலே கூறப்பட்ட வணிக யுக்திகளை கையாளக்கூடிய சிறிய தைரியம் உங்களது மனதில் இருந்தால் நீங்களும் இந்த உலகில் சிறந்த ஒரு பிசினஸ்மேனாக மாறமுடியும்.

# மின்னியல் பாவனை

வணிகம் இன்று வானத்தின் எல்லை வானத்தின் எல்லைக்கு வேறேதும் ஈடில்லை வளர்க தேவை வளர்க சேவை வணிகத்தினால் அனைத்தும் வளர்ந்தனவே

நேர் உற்பத்தித் தானே வணிகத்தின் தேற்றம் வந்தது அதற்குள் சிறப்பு தேர்ச்சி மாற்றம் வாழ்க்கை மாற்றம் நவீன மாற்றம் வந்தது

இலத்திரனியல் வளர்ந்தது இணையம் பிறந்ததற்குள் பிளாஸ்டிக் அட்டைகள் ஸ்மார்ட் அட்டைகள் ரெலர் அட்டைகள் கடனட்டை வரவட்டை பறந்தது அனைவரின் பணப்பை யில் இருந்து

மின்னியல் பாவனை வணிகத்துக்கோர் சாதனை, சாதனை மத்தியில் மின்னஞ்சல் பாவனை குறைந்த செலவு விரைந்த சேவை விரிந்த தகவல் குறைந்த நேரம் உலகெங்கும் மின்னியது மின்னஞ்சல் சேவை

மனிதனும் அசைந்தான் வாழ்க்கையும் அசைந்தது வணிகத்தின் வளர்ச்சியில் இது ஒரு புரட்சி, புரட்சியில் நாமும் புதுயுகம் படைப்போம் வானத்தின் எல்லைக்கு வாழ்க்கையை தொடுப்போம், தொடுப்போம் வாழ்க்கையை வணிகத்தோடு

இன்னவள் காகிதங்களின் காதலி **ஷிராணி**



# CYBER CRIME
# சைபர் குற்றம்
## பாதிக்கப்பட்டவர்கள் ஏராளம்

பாத்திமா ஹகீமா அமீனுதீன்
ஓட்டமாவடி

**தற்கால உலகில் சைபர் என் சொல்லானது நிச்சயம் அனைவராலும் கேள்விப்பட்ட சொல்லாகத் தான் இருக்கும். ஏன் அந்த சொல்லால் பாதிக்கப்பட்டவர்களும் இங்கு ஏராளமாகவே இருக்கலாம்.**

### 01.சைபர் குற்றம் என்றால் என்ன?

சைபர் என்ற சொல்லானது "இணையம்" என்பதைக் குறிக்கப் பயன்படும் ஒரு சொல்லாகும். அதே போல் Crime என்ற சொல்லும் நாளுக்கு நாள் அனைவரின் செவிகளிலும் விழும் ஒரு சொல்லாகத் தான் இருக்கும். ஏனெனில் இன்றைய யுகத்தில் நாளுக்கு நாள் நடந்து கொண்டிருக்கும் கொடுமைகளில் ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது இந்த சொல் நம்மை வந்தடையாமல் இருப்பதில்லை.

சைபர் குற்றம் என்பதன் மற்ற வார்த்தைகள்:
•சைபர் குற்றம்
•இணைய குற்றம்
•இன்டர்நெட் குற்றம்
•இணைய தகவல்களை திருடுதல்
•டிஜிட்டல் வடிவில் உள்ள ஆவணங்களை களவாடுதல்
•இணையத்தில் உலவும் தகவல்களை இடைமறித்து பெறுதல்
•இணையத்தின் மூலம் குற்ற செயல்களில் ஈடுபடுதல்
•தொழில்நுட்ப தகவல் திருட்டு

Cyber crime (சைபர் கிரைம்) என்பது, மற்றவர்களுக்கு தீங்கிழைக்கும் நோக்கத்துடன் கணினி, இணையம் மூலமாக நடைபெறும் குற்றச் செயலாகும். இந்த சைபர் குற்றங்கள் கிரிமினல்களின் லாபத்திற்காகவும், கணினிகளை சேதப்படுத்த அல்லது செயலிழக்க வைக்க நடத்தப்படுகிறது. சிலர் தீங்கிழைக்கும் நச்சு நிரல்களை (Virus) பரப்பி இணையத்தில் பரப்பி பாதிப்பை ஏற்படுத்துகின்றனர்.

### 02.சைபர் குற்றத்தின் நோக்கங்கள்.

சைபர் குற்றங்களை செய்யும் கிரிமினல்களுக்கு பின்வரும் சில நோக்கங்கள் இருக்கும்.

•தனிப்பட்ட நபர்களின் அந்தரங்க தகவல்களை அவரின் அனுமதி இல்லாமல் இணையம்

வழியே திருடுதல்.

•அந்த தகவல்களை கொண்டு அவர்களை மிரட்டுதல், பணிய வைத்தல்.

•இன்டர்நெட் பேங்கிங் Login தகவல்களை, டெபிட் கார்டு, கிரெடிட் கார்டு தகவல்களை திருடி அதன் மூலம் வங்கிக்கணக்கில் இருக்கும் பணத்தை எடுத்தல்.

•சில நபர்களின் புகைப்படங்களை ஆபாசமாக சித்தரித்து அதை இணையத்தில் பரப்புதல்.

•கணினி அல்லது சாதனங்களை சேதப்படுத்துதல் அல்லது செயலிழக்க செய்தல்.

•ஒருவரின் அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாக ஆன்லைன் வழியாக அவரை கண்காணித்தல்.

•சட்டவிரோதமாக லாபத்தை பெரும் நோக்கில் தகவல்களை மாற்றுவது, சேதப்படுத்துவது, அழிப்பது.

## 03.சைபர் குற்றத்தின் வகைகள்.

தொழில்நுட்பக் குற்றங்கள் பல்வேறு வகைகளிலும் வடிவங்களிலும் செயல்படுத்தப்படுகின்றன. கணிணியினால் ஏற்படும் குற்றங்களை பின்வருமாறு பிரிக்கலாம்:

## 01. கணினியை குறிவைத்து ஏற்படுத்தப்படும் குற்றங்கள்

### கணினி நச்சு நிரல் (virus)

கணினி வைரஸ் என்பது ஒரு வகை கணினி நிரலாகும், இது செயல்படுத்தப்படும்போது, பிற கணினி நிரல்களை மாற்றியமைப்பதன் மூலமும், அதன் சொந்த குறியீட்டைச் செருகுவதன் மூலமும் தன்னைப் பிரதிபலிக்கிறது. இந்த பிரதி வெற்றிபெறும் போது, பாதிக்கப்பட்ட பகுதிகள் கணினி வைரஸால் "பாதிக்கப்பட்டுள்ளன" என்று கூறப்படுகிறது. வைரஸ் எழுத்தாளர்கள் சமூக பொறியியல் மோசடிகளைப் பயன்படுத்துகின்றனர் மற்றும் பாதுகாப்பு பாதிப்புகள் பற்றிய விரிவான அறிவை ஆரம்பத்தில் கணினிகளைப் பாதிக்க மற்றும் வைரஸைப் பரப்புவதற்கு பயன்படுத்துகின்றனர்.

மைக்ரோசாப்ட் விண்டோஸ் இயங்கும் பெரும்பாலான வைரஸ்கள், புதிய ஹோஸ்ட்களைப் பாதிக்க பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றன, மற்றும் பெரும்பாலும் வைரஸ் தடுப்பு மென்பொருளைத் தவிர்ப்பதற்கு சிக்கலான கண்டறிதல் / திருட்டுத்தனமான உத்திகளைப் பயன்படுத்துகின்றன. கணினி வைரஸ்கள் தற்போது ஒவ்வொரு ஆண்டும் பில்லியன் கணக்கான டாலர் மதிப்புள்ள பொருளாதார சேதத்தை ஏற்படுத்துகின்றன, கணினி செயலிழப்பு, கணினி வளங்களை வீணாக்குவது, தரவை சிதைப்பது, பராமரிப்பு செலவுகளை அதிகரிப்பது, தனிப்பட்ட தகவல்களைத் திருடுவது போன்றவை காரணமாக இதற்கு பதிலளிக்கும் விதமாக, இலவச, திறந்த-மூல வைரஸ் தடுப்பு கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன, மேலும் வைரஸ் தடுப்பு மென்பொருளின் ஒரு தொழில் பல்வேறு இயக்க முறைமைகளின் பயனர்களுக்கு வைரஸ் பாதுகாப்பை வளர்த்து, விற்கிறது அல்லது இலவசமாக விநியோகிக்கிறது.

தற்போதுள்ள எந்த வைரஸ் தடுப்பு மென்பொருளும் அனைத்து கணினி வைரஸ்களையும் (குறிப்பாக புதியவை) கண்டுபிடிக்க முடியவில்லை என்றாலும், கணினி பாதுகாப்பு ஆய்வாளர்கள் ஏற்கனவே பரவலாக விநியோகிக்கப்படுவதற்கு முன்பு, வளர்ந்து வரும் வைரஸ்களை மிகவும் திறம்பட கண்டறிய வைரஸ் தடுப்பு தீர்வுகளை செயல்படுத்த புதிய வழிகளை தீவிரமாக தேடுகின்றனர். வைரஸ்" என்ற சொல் மற்ற வகை தீம்பொருளைக் குறிக்க நீட்டிப்பு மூலம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.

கணினி "புழுக்கள்", பணையத் தீநிரல், ஸ்பைவேர், ஆட்வேர், ட்ரோஜன் ஹார்ஸ், கீலாக்கர்கள், ரூட்கிட்கள், தீங்கிழைக்கும் உலாவி உதவி பொருள் (BHOகள்) மற்றும் பிற தீங்கிழைக்கும் மென்பொருள் போன்ற பல தீங்கிழைக்கும் மென்பொருட்களுடன் "தீம்பொருள்" கணினி வைரஸ்களை உள்ளடக்கியது.

செயலில் உள்ள தீம்பொருள் அச்சுறுத்தல்களில் பெரும்பாலானவை உண்மையில் கணினி வைரஸ்களைக் காட்டிலும் ட்ரோஜன் ஹார்ஸ் புரோகிராம்கள் அல்லது கணினி புழுக்கள். 1985 ஆம் ஆண்டில் ஃப்ரெட் கோஹன் உருவாக்கிய கணினி வைரஸ் என்ற சொல் ஒரு தவறான பெயர். வைரஸ் பெரும்பாலும் பாதிக்கப்பட்ட ஹோஸ்ட் கணினிகளில் சில வகையான தீங்கு விளைவிக்கும் செயல்களைச் செய்கின்றன, அதாவது வன் இடம் அல்லது மத்திய செயலாக்க அலகு (சிபியு) நேரத்தைப் பெறுதல், தனிப்பட்ட தகவல்களை அணுகுவது மற்றும் திருடுவது (எ.கா., கடன் அட்டை எண்கள், பற்று அட்டை எண்கள், தொலைபேசி எண்கள், பெயர்கள், மின்னஞ்சல் முகவரிகள், கடவுச்சொற்கள், வங்கி தகவல், வீட்டு முகவரிகள் போன்றவை), தரவை சிதைப்பது, அரசியல், நகைச்சுவையான அல்லது அச்சுறுத்தும் செய்திகளை பயனரின் திரையில் காண்பித்தல், அவர்களின் மின்னஞ்சல் தொடர்புகளை ஸ்பேம் செய்தல், அவற்றின் விசை அழுத்தங்களை பதிவு செய்தல் அல்லது கணினியை பயனற்றதாக மாற்றுவது.

இருப்பினும், எல்லா வைரஸ்களும் ஒரு அழிவுகரமான "பேலோடை" கொண்டு தங்களை மறைக்க முயற்சிக்கவில்லை-வைரஸ்களின் வரையறுக்கும் பண்பு என்னவென்றால், அவை சுய-பிரதி கணினி நிரல்களாகும், அவை பயனர் அனுமதியின்றி பிற மென்பொருளை மாற்றியமைக்கும், அவை ஒரு உயிரியல் போன்றவை வைரஸ் இது உயிரணுக்களுக்குள் பிரதிபலிக்கிறது.

## சேவை மறுப்புத் தாக்குதல் (Denial of service attacks)

சேவை மறுப்புத் தாக்குதல் (Denial of Service attack, DoS attack, Distributed Denial of Service, DDoS attack) என்கிற சொற்றொடர் கணினியியலில், ஒரு கணினியோ (பெரும்பாலும் வழங்கிக்கணினி) அல்லது வலையமைப்போ (Network) தரும் சேவையை (Service)/ வளங்களை (Resource) அதன் உண்மையான பயனர்கள் அணுகாவண்ணம் முடக்க மேற்கொள்ளப்படும் தீய முயற்சியாகும். இந்த முயற்சியை செய்பவர் பல்வேறு காரணங்களுக்காக இதைச் செய்தாலும், பொதுவான நோக்கம் ஒரு கணினியோ அல்லது வலையமைப்போ தரும் சேவைகளை தற்காலிகமாகவோ அல்லது சேவை தரும் நிறுவனம் இதைக் கண்டறிந்து நீக்கும் வரையோ இடைமறிப்பது அல்லது முழுவதுமாக தடுத்து நிறுத்துவதே ஆகும்.

பெரும்பாலும் இதுபோன்ற தாக்குதல் பிரபலமான, அதிக நெரிசலுடைய (Web Traffic, Network Traffic) வலையமைப்பிலோ, கணினியிலோதான் மேற்கொள்ளப்படும். வழங்கிக் கணினிக்கு தொடர்ச்சியான, பொய்யான சேவை கோரிக்கைகளை அனுப்பி அதை ஓய்வில்லாது இயங்கச்செய்து, அதன் வளங்களை வீணடிப்பதன் மூலம் அதன் உண்மையான பயனர்களுக்கு அதன் சேவை கிடைக்காமல் செய்யப்படுகிறது.

## தீப்பொருள் (Malware)

தீங்கிழைக்கும் மென்பொருள் என்பதைச் சுருக்கமாகக் குறிக்கும் தீப்பொருள் (Malware) என்பது கணினியின் செயல்பாட்டை கெடுக்கவும், முக்கியமான தகவல்கள் மற்றும் விவரங்களை

சேகரிக்கவும், அல்லது தனியார் கணினிகளை அவர்களின் அனுமதி இன்றி அணுகவும் இணைய குறும்பர்களால் (ஹேக்கர்கள்) வடிவமைக்கப்பட்ட ஒரு மென்பொருள் ஆகும். விரோதமான, ஆக்கிரமிக்கின்ற அல்லது நிராகரிக்கின்ற மென்பொருள் அல்லது நிரல் குறியீட்டு வடிவங்களின் வகையைக் குறிக்க கணினி வல்லுநர்களால் பயன்படுத்தப்படும் சாதாரண சொல்லின் வெளிப்பாடே இதுவாகும். உண்மையான நச்சுநிரல்கள் (வைரஸ்கள்) உள்ளடங்கலாக தீப்பொருளின் அனைத்து வகைகளையும் உள்ளடக்க கணினி வைரஸ் என்ற பதமானது அனைத்து சொற்றொடர்களின் சேர்க்கையாக சிலவேளைகளில் பயன்படுத்தப்படும்.

மென்பொருளானது அதன் குறித்த அம்சங்கள் எதையும் அடிப்படையாகக் கொண்டு அல்லாமல், உருவாக்குநரின் தெரிந்துகொள்ளும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே தீப்பொருள் என கருதப்படுகிறது. தீப்பொருளானது, கணினி வைரஸ்கள், வேர்ம்கள், ட்ரோஜன் ஹார்சுகள், பெரும்பாலான ரூட்கிட்கள், வேவுபொருள், ஏமாற்று விளம்பரபொருள், குற்றப்பொருள் மற்றும் பிற தீங்கு விளைவிக்கும் மற்றும் தேவையற்ற மென்பொருள் ஆகியவற்றை உள்ளடக்கும். சட்டத்தில், சிலவேளைகளில் தீப்பொருளானது ஒரு கணினி தொற்றுப்பொருள் என கூறப்படும், எடுத்துக்காட்டாக, கலிபோர்னியா மற்றும் மேற்கு வர்ஜீனியா போன்ற பல அமெரிக்க சட்ட குறியீடுகளில் கூறப்படுகிறது.

தீப்பொருள் என்பது குறைபாடுடைய ஒரு மென்பொருளை ஒத்தது அல்ல, அதாவது, இது சட்டரீதியான நோக்கமுடையது, ஆனால் கேடு விளைவிக்கக்கூடிய பிழைகளைக் கொண்டிருக்கும்.

2008ம் ஆண்டு சிமண்டெக் வெளியிட்டுள்ள முதற்கட்ட முடிவுகளின்படி, "சட்டரீதியான மென்பொருள் பயன்பாடுகளை விட தீங்கிழைக்கும் மற்றும் தேவையற்ற நிரல்களின் வெளியீட்டு வீதமானது அதிகரிக்கக் கூடும்" எனக் கூறப்பட்டுள்ளது. F-செக்யூர் கூறியுள்ளதன்படி, "கடந்த 20 ஆண்டுகளில் மொத்தமாக தயாரிக்கப்பட்ட தீப்பொருள்கள் அளவுக்கு 2007ம் ஆண்டு தீப்பொருள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. தீப்பொருள் பொதுவாக குற்றவாளிகளிலிருந்து பயனர்களுக்கு இணையம் வழியாகவே கடத்தப்படுகின்றன: முதன்மையாக மின்னஞ்சல் மூலம் மற்றும் வைய விரி வலை மூலம்.

தனித்துவமான, புதிதாக உருவாக்கப்பட்ட சிறப்பான தீப்பொருளின் தொடரோடிக்கு எதிராக பாதுகாக்க மரபுவழி தீப்பொருள் தடுப்பு பாதுகாப்பு பணித்தளங்களின் பொதுவான ஆற்றலற்ற தன்மையுடன் சேர்ந்து ஒழுங்கமைக்கப்பட்ட இணைய குற்றத்துக்கான காவியாக தீப்பொருள் இருப்பதானது இணையத்தில் வணிகங்கங்களை நடத்துவதற்கான புதிய மனநிலையின் மாற்றம் காணப்பட்டுள்ளது - சில குறிப்பிட்ட அளவான இணைய வாடிக்கையாளர் வீதமாது சில காரணங்களுக்காக அல்லது வேறு காரணங்களுக்காக எப்பொழுதும் பாதிக்கப்படும் என்றும் மற்றும் அவர்கள் பாதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களுடன் வணிகத்தை தொடர வேண்டும் என்றும் ஒப்புக்கொள்ளுதல். வாடிக்கையாளர் கணினிகளில் மேம்படுத்தப்பட்ட தீப்பொருள்களை இயக்குவதுடன் இணைந்துள்ள மோசடி நடவடிக்கைகளைக் கண்டுபிடிக்க வடிவமைக்கப்பட்டுள்ள பாக்-ஆஃபீஸ் அமைப்புகளில் இந்த முடிவு பெரிய அழுத்தமாக அமைந்தது.

தொடரும்...

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர நெஞ்சங்கள்
@skytamil.lk
மாதந்தோறும் | இதழ் - 31 | 10 செப்டம்பர் 2023

# மரபு அறிவோம்



## தொடர் 2

சபீனா வைத்துள்ளாஹ்,
கிண்ணியா சபீனா மாஞ்சோலை,

ஈரசைச் சீர்கள் பற்றி பார்த்தோம்! அதனை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்தி விட்டு அடுத்த விடயங்களைப் பார்ப்போம்!

எழுத்துக்கள் சேர்ந்து சொல்லாகின்றது! ஆனால் மரபிலே : எழுத்துக்கள் சேர்ந்த சொல்லை அசை என்பர்! அசைகள் சேர்ந்து சீர்கள் உருவாகும் என்பர்!

**சீர்களை**

ஓரசைச் சீர்
ஈரசைச் சீர்
மூவசைச் சீர்
நாலசைச் சீர்
என வகுப்பர்!

மூவசைச் சீர்கள் வரை கட்டாயம் விளங்கிக் கொள்ள வேண்டும்!

நினைவூட்டலுக்காக:
பழம் - நிரை-ஓரசைச் சீர்
பழங/கள் --ஈரசைச் சீர்.
நிரை / நேர் - புளிமா
பல் --நேர்-ஓரசைச் சீர்.
பற்/கள் ---ஈரசைச் சீர்
நேர் /நேர் - தேமா
கடல் -- ஓரசைச் சீர்
கடற்/ கரை -ஈரசைச்சீர்.
நிரை/நிரை- கருவிளம்
கண் -நேரசை
கண்/மணி --ஈரசைச் சீர்
நேர் /நிரை - கூவிளம்

என ஈரசைச் சீர்கள் பெயர் பெறும்!
இப்போது: புரிந்திருக்கும் என நினைக்கிறேன்
மரபில் உள்ள நேரசையும் நிரையசையும் ஈரசையாகச் சேர்ந்து உருவாக்கும் சீர்கள் என்னவென அறிந்திருப்பீர்கள் !
இனி,
**மூவசைச் சீர்கள் பற்றிப் பார்ப்போம்!**

உதாரணமாக :
மரபுப்பா : எனும் சீரில் (சொல்லில் )உள்ள அசைகள் பற்றிப் பார்ப்போம்!
மர /புப்/ பா -
நிரை / நேர் /நேர்.
இரு குறில் /குறில் ஒற்று / தனிநெடில்.

ஆகவே மரபுப் பா
எனும்( சொல்)சீர் மூவசைச் சீர் ஆகி
புளி மாங்காய்ச் சீர்
எனப் பெயர் பெறுகின்றது!

மூவசைச் சீர்களால் உருவாவது காய்ச்சீர்கள் ஆகும்! அவை பின்வருமாறு அமையும்!

1.நேர்/நேர்/நேர்-
தேமாங்காய்
2. நிரை/நேர்/நேர்- புளிமாங்காய்
3 நிரை/நிரைஃநேர்-
கருவிளங்காய்

4.நேர்/நிரை/நேர்- கூவிளங்காய்
எனக் காய்ச் சீர்கள் பெயர் பெறுகிறது!
இவற்றை உதாரணங்களுடன் பார்ப்போம்!

உள்/ளங்/கள்.
நேர்/நேர்/நேர்.
தேமாங்காய்

விளை/யாட்/டு.
நிரை/நேர்/நேர்.
புளிமாங்காய்

கடற்/கரை/கள்.
நிரை/நிரை/நேர்.
கருவிளங்காய்

கட்/டுரை/கள்.
நேர்/நிரை/நேர்.
கூவிளங்காய்
எனக் காய்ச்சீர்கள் அமைகின்றன!

## மூவகைச் சீர்கள்

மூவகைச் சீர்களில் காய்ச் சீர்கள் பற்றிப் பார்த்தோம்! அவற்றை ஞாபகப் படுத்திக் கொண்டு, கனிச்சீர்கள் பற்றிப் பார்ப்போம்!

காய்ச்சீர்கள்
1. தேமாங்காய்.
2. புளிமாங்காய்.
3. கருவிளங்காய்.
4. கூவிளங்காய்.

என்பனவே அவையாகும்!
இவற்றுக்கான உதாரணங்களும் பார்த்தோம்!
இனி கனிச்சீர்கள் என்றால் என்ன என அறிவோம்!
மூவகைச் சீர்களில் ஈற்றசை நிரையசையாக வந்தால், அதுவே கனிச்சீர் ஆகும்!

உதாரணம் :-
விளை/யாட்/டு : இதில்
நிரை /நேர் /நேர். புளிமாங்காய்.
இதில் கடைசி அசை நேர் அசையாக உள்ளது!

விளை/யாட்/டிலே, நேர்/நேர்/நிரை (டிலே-நிரை அசை ) வந்தது! எனவே இது புளிமாங்கனிச் சீர்ஆகும்!

அது போல, உள்/ளங்/கள் -
நேர் /நேர்/ நேர்
தேமாங்காய் ஆகும்!

உள்/ளங்/களை
நேர் /நேர்/நிரை.
கடைசிஅசை நிரை அசை ஆகும்!
எனவே இது தேமாங்கனிச் சீர் ஆகும்! அடுத்து கருவிளங்கனிச் சீர்பற்றிப் பார்ப்போம்!

கடற்/கரை/கள்- இது
நிரை/ நிரை/ நேர்
கருவிளங்காய்ச்சீர் ஆகும்!
இதைக்
கடற்/கரை/களில், என்றிட
நிரை /நிரை /நிரை
என்பதில் கடைசி அசையும், நிரை அசையில் வந்துள்ளது! எனவே இது கருவிளங்கனிச் சீர் ஆகும்!

அடுத்து,
கட்/டுரை/கள்.
நேர்/ நிரை/ நேர்
கூவிளங்காய் ஆகும்!
இதை :
கட்/டுரை/களில்- நேர்/நிரை/நிரை -என அசை பிரிக்க கடைசி அசை நிரை அசையில் உள்ளது! எனவே இது கூவிளங்கனிச்சீர் ஆகும்!

**காய்ச்சீர்கள் நான்கும் கனிச் சீர்களாக மாற ஈற்றசை நிரையசையாக வரவேண்டும்**

**இன்னும் உண்டு!...**

sky தமிழ் NEWS

# எமது செய்திச் சேவையின்

## உத்தியோகபூர்வ இணையதளம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



www.skytamilnews.com

skytamil.lk